www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# வெளிச்சம்

மார்கழி - 1992
20/-



விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று தமிழீழத்தின் கணிசமான படைப்பாளிகளும், கலைஞர்களும் ஐரோப்பாவிலும், மற்றும் அனைத்துக் கண்டங்களிலும் வாழ்கின்றனர் என்பதை கனடாவில் இருந்தும். லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, நோர்வே, சுவிற்சலாந்து போன்ற நாடுகளில் இருந்தும், இங்கிருந்து புலம்பெயர்ந்த படைப்பாளிகளினால் வெளியிப்படும் சிற்றிலக்கிய ஏடுகளையும், இதழ்களையும் பார்க்கும்போது உணரமுடிகின்றது.

இங்கிருந்து புலம்பெயர்ந்து மேற்கு நாடுகளுக்குச் சென்றுள்ள கணிசமான எழுத்தாளர்களும், கலைஞர்களும் இந்த மண்ணின் மீதும், மக்களின் விடுதலைக்காகப் போராடும் வேங்கைகள் மீதும், பற்றும், இந்தப் போராட்டம் வெல்லுமென்று நம்பிக்கையும் கொண்டு எழுதியும், பாடியும், ஆடியும் தாங்கள் எங்கிருந்தாலும் தங்கள் போராட்டப் பங்களிப்பைச் செய்துவருவதை அறிவோம். அவர்களைத் தமிழீழத்தில் இருந்து கொண்டு விடுதலைக்குப் பணியாற்றும் படைப்பாளிகள், கலைஞர்கள் போலவே நாங்கள் பார்க்கின்றோம். இங்கு எழும் நமது குரல்கள் தூரநாடுகளைச் சென்றடைவதற்கு முன்னரே, தாயகப் பறறுள்ள புலம்பெயர்ந்த கலை, இலககியவாதிகளின் குரல்கள் எமக்காகவே அங்கு ஒலிப்பதையும் உணருகின்றோம். தினம் தினம் தீக்குளிக்கும் தமிழீழக் கலைஞர்களும், எழுத்தாளர்களும் இவர்களது பணியையும், பெயர்களையும் நன்கு தெரிந்துவைத்துள்ளனா. அவர்களை விதந்துரைத்து தமிழீழத்து இதழ்களில் எழுதியும், அரங்குகளில் பேசியும் மனங்கொண்டு வருகின்றனர். தாயகப் பற்றுள்ள புலம்பெயர்ந்த கலைஞர்களின் பங்கும், பணியும் விடுதலையை மையங்கொண்டதாக இருக்க, மறுசாரரான வியாபார நோக்கங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டவர்கள் முரண்பக்கமாக நின்று செயற்படுவதையும் அவதானிக்க முடிகிறது தாங்கள் புலம்பெயர்ந்து சென்றதற்கான சுயலாப நியாயங்களை நிலைநிறுத்த, தங்களுக்காக வரித்துக்கொண்ட சாத்தியப்பாடற்ற, உண்மைகளற்றவற்றை தேவைகருதித் தூக்கிப்பிடித்து எழுதி வருகின்றனர்.

இந்த மண்ணின் மீதும், இனத்தின் விடுதலையின் மீதும் பற்றுக் கொண்டுள்ள போராளிகளாலும், கலைஞர்களாலும் எங்கள் தாயகம் நிரம்பியுள்ளது.

நாங்கள் வெல்லுவோம் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு, இந்த நம்பிக்கையை உலகத்தில் எங்கு வாழ்ந்தாலும், தமிழீழத்தின் படைப்பாளியாக அல்லது கலைஞராக வாழ்வரிடத்தும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். என்றாவது ஒருநாள் எங்கள் மண்ணுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் திரும்பி வரும் பொழுது இந்தமண் விடுவிக்கப் பட்டிருக்கும்.

இங்கு வீசும் காற்றில், எதிரியின் சுவாசம் கலந்திருக்க மாட்டாது மறைந்த எங்கள் மாவீரரின் இறுதி மூச்சுக்கள் இரண்டறக் கலந்து இருக்கப் போகும் எங்கள் தாயகத்தின் விடுதலைக்கு எல்லோருடைய பங்களிப்பையும், அவர்கள் எங்கிருந்தாலும், அங்கிருந்து கொண்டு ஆற்றவேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

வெளிச்சம்

மார்கழி — 1992

இதழ் - 9



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவன் வாழி!

புதுவை இரத்தினதுரை

மரகத நிலமும், எங்கள்
மாதவ மொழியும், வாழ்வும்
வதைபடக் கண்டும் நாங்கள்
வளைந்துபோய் இருந்தோம். எங்கள்
உதயமே! தமிழர் நெஞ்சில்
உணர்வினைத் தந்தாய், 'நாமும்
உதைக்கலாம்' எதிரிக் கென்ற
உண்மையைச் சொல்லித் தந்தாய்.



குட்டிடக் குனிந்தோம், மாற்றான்
குரல்வளை நெரித்த போதும்
கட்டுண்டு படுத்தோம், மூச்சுக்
காட்டிடா திருந்தோம், 'நெற்றிப்
பொட்டிடக் கூட அஞ்சிப்
புழுங்கினோம்' தலைவா! உன்கை
பட்டபின் தானே நாங்கள்
பாய்கின்ற புலிகள் ஆனோம்

இந்தமண் வீரம் கொண்டு
எழுந்திட வைத்தாய், பிஞ்சுச்
சந்தனப் பூவும் இங்கே
சரித்திரம் படைக்கச் செய்தாய்!
'வந்துநம் மண்ணை யாரும்
வளைத்திட முடியா' தென்றாய்,
முந்தைய வீரம் மீண்டும்
முளைத்திடச் செய்தாய். வாழி!

26 - 11 - 1992 தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் 39 வது பிறந்த நாளையொட்டி அவருக்கு எமது வாழ்த்துக்கள்

வெளிச்சம்

தமிழரை யார் தொட்டாலும்
தலைவன்கை அவனைக் குட்டும்
தமிழரைப் பழிக்கும் எந்தத்
தலையையும் அவன்கை வெட்டும்
தமிழரைக் காக்கும் எங்கள்
தலைவனை வாழ்த்தி, வாழ்த்தித்
தமிழரெல் லாரும் பாடித்
தாங்குவோம், தலைவா! வாழி!

ஐயன் பல்லாண்டு காலம்
அழகொடும், வீரத் தோடும்
வையகத் திருக்க வேண்டி
வாழ்த்துவோம்; வேங்கை வீரன்
கையினைப் பற்றி நாங்கள்
களத்தினிற் குதிப்போம். வெற்றி
எய்துவோம், பரணி ஒன்றை
எழுதுவோம். தலைவன் வாழி!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1992ம் ஆண்டின் மாவீரர் நாள் பிறக்கப்போகின்றது. இந்த நாளின் பிறப்பின்போது நாம் மாவீரர் துயிலுமில்லத்தில் நிற்கவேண்டும். இதற்காகச் சென்றுகொண்டிருக்கின்றோம். பகலிலேயே எங்கோ ஒருவரைத் தான் காணக்கூடியதாக இருக்கும் இராசபாதையில் இந்த நள்ளிரவிலும் ஒரே மக்கள் கூட்டம். இந்த வீதியிலிருந்து மாவீரர் துயிலுமில்லத்திற்குச் செல்லும் வீதியில் இன்னும் கூடுதலான மக்கள் திரள்திரளாகச் செல்கிறார்களோ ...... இவர்கள் கிளாலியை நோக்கிச் செல்லும் மக்கள் கூட்டமல்ல...... நல்லூர்த் திருவிழா முடிந்ததும் கடலைக் கடைகளுக்கும் ஐஸ்கிறீம் கடைகளுக்கும் வேடிக்கை பார்க்கும் கூட்டமுமல்ல...... அனைவருமே உணர்ச்சிப் பிளம்புகளாய் காட்சியளிக்கின்றார்கள். எங்கள் தேசத்தின் விடுதலையைச் சத்தியம் செய்யும் அந்தக் கூட்டத்தினூடேதான் போய்க் கொண்டிருக்கிறோம். இது ஒரு வித்தியாசமான அனுபவம்தான். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின்போதும் மனதுள் ஏதோ ஒன்று...... அதை விபரிக்க முடியவில்லை.

''என்ரை ராசா...... கிளியண்ணை வந்திருக்கிறார் ... பாரன் ..... ராசா...... சத்தம் போடாதையணை கிளியண்ணை வந்திருக்கிறார் எண்டு சொல்லுவியே ..... இப்ப கிளியண்ணை வந்திருக்கிறார் ஒருக்காப் பார் ராசா .....''— ஒரு மாவீரனின் சமாதியில் அவர் தாய் அழுதுகொண்டே சொல்லும் வார்த்தைகள் எமது நெஞ்சைப் பிழிகின்றது. கண்ணீர் முட்டுகிறது. கூட வந்தவர்களுக்குத் தெரியாதபடி துடைத்துக் கொள்கிறேன் இப்போதே அழத்தொடங்கினால் ..... கஷ்டப்பட்டு கண்ணீரைச் சிக்கனப்படுத்திக் கொள்கிறேன்...... பின்பு தேவையல்லவா.

வழியில் இந்த ஆண்டு மாவீரர் தினம் பிறக்கும் வேளையில் மணியோசைக்குப் பின் ஒலிக்கவிருக்கும் மாவீரர் பாடலைப் பாடிய வர்ணராமேஸ்வரன் வருகிறார். ''ராமேஸ்வரன் எனக்குப் பக்கத்தில நில்லுங்கோ...... நீங்கள் தான் எனக்குப் பக்கத்தில நிண்டு பாடுறது''— உரிமையுடன் கட்டளையிடுகிறார் புதுவையண்ணா...... இப்படித்தான் நாங்கள் எங்கள் மக்களை வசப்படுத்திக்கொண்டிருக்கிறோம்.



## இன்றைய நிகழ்வில் அன்றைய நினைவுகள்

கரும்பறவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுற்றுமுற்றும் பார்க்கிறேன். மாவீரர் சமாதியில் வத்துவர்த்திகளைக் கொழுத்தியும், மலர்வைத்தும்...... எந்த ஒரு ஆலயமும் இந்த மாதிரியான புற—அகத் தூய்மையோடு காணப்படுவதில்லை ..... கண்ணீரைக் கட்டுப்படுத்த சிரமமாயிருக்கிறது. சாதாரணமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளச் சிரமப்படுகின்றேன். ஒவ்வொரு விநாடியும் செல்லச்செல்ல மயிர்க்கால்கள் குத்திடுகின்றன.

மாவீரர் துயிலுமில்லத்தில் முதலாவது சுடர் ஏற்றப்படும் இடம் - அந்த நேரத்தை எதிர்பார்த்தபடி மனம் எதையோ தேடுகின்றது. 12-00 மணி யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் முதலாவது சுடரை ஏற்றுகிறார். எங்கும் ஆலயமணியோசை .. தீபத்தில் ஏற்றப்படும் ஒளியைத் தொடர்ந்து எனது கண்கள் எனது கட்டுப்பாட்டை இழக்கின்றன. ஆலயமணியின் ஓசை ஒலிக்க மட்டும் மௌனமாக நின்று அஞ்சலிக்கின்றோம். ராமேஸ்வரன் பாடுகிறார். இந்த பாடல் ஒலிபெருக்கியிலும் .... நாம் உறுதியெடுத்துக் கொள்கின்றோம்... ...

*வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்*
*வரலாறு மீதிலும் உறுதி.*
*விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை*
*வீரர்கள் மீதிலும் உறுதி*
*இழிவாக வாழோம் தமிழீழப்போரில்*
*இனிமேலும் ஓயோம் உறுதி!*

நான் — ஏன் அழுகின்றேன்... .. இழப்புக்களால் உரமேறிய தேசமல்லவா எனது தேசம் .. ஐயாயிரத்துக்கு மேலும் சில நூறு பேர்களை இழந்துவிட்டோமே இன்னுமா மாறவில்லை நான் சிலனது வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. "போராளிகள் மென்மையான மனமுடையவர்கள். மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் கண்டு மனம் சகிக்கமுடியாதவர்களே போராளிகளாகின்றனர் அதைத் தாங்கிக்கொண்டு சாதாரணமாக இருக்கக் கூடியவர்கள்தான் போராட்டத்துக்கு வெளியில் நிற்கிறார்கள்"— எவ்வளவு அச்சொட்டான வார்த்தைகள் இவை. சூழவுள்ள மக்களைப் பார்க்கிறேன். எத்தனை எத்தனை ஆயிரம் சொந்தங்கள் எமக்கு... எல்லோரும் எம்மவர்கள்... ஆனால் அன்று நீயும் ஆனந்தும் எரிக்கப்படும்போது உங்களுக்குப் பக்கத்தில் ஒருவருமே இல்லையே... உனது வீரச்சாவுச் செய்திகேட்டு திருமலையிலிருந்து பறந்துவந்த உனது அம்மா உனது உடலைத்தரும்படி எவ்வளவு மன்றாடியிருப்பார் ஸ்ரீலங்கா! இராணுவத்திடம். அவர்கள் உனது உடலைக் கொடுக்கவில்லையே ...... பௌத்த தர்மம் அதற்கு இடமளிக்கவில்லை ... இன்று இந்தத் தேசமே நிமிர்ந்து நின்று எங்களுக்காகச் சொந்தம் கொண்டாடுகிறது. நாங்கள் வளர்ந்துவிட்டோம்...... எங்கும் போராளிகள், பொது மக்கள்......

ஒரு தாக்குதலுக்காக யாழ் நகரப் பகுதிக்குள் சென்றுகொண்டிருக்கிறோம். மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் இராணுவத்தினர் இரண்டு வாகனங்களில் வந்து இறங்குகின்றனர் கம்பீரமான தோற்றத்துடன் தனக்குச் சொந்தமில்லாத மண்ணில் நடமாடுகின்றனர் இராணுவத்தினர். அப்போது நீ சொல்கிறாய், "இதப்போல நாங்களும் ஆமிசைக்கட்டிக்கொண்டு சுதந்திரமா பஸ்ராண்டுக்க திரியவேணும். அப்ப அது புதினமில்லாதமாதிரிச் சனம் போக வேணும்"— எவ்வளவு ஆசையாகச் சொன்னாய் இதை போராட்டம் வெல்லும் ..... நாங்கள் வளர்வோம் என்பதெல்லாம் நாம் எதிர்பார்த்ததுதான் , ஆனால் இவ்வளவு விரைவாகவா எல்லாம் இன்று போல் இருக்கிறது.

*"உங்களைப் பெற்றவர் உங்களின்*
*- தோழிகள்*
*உறவினர் வந்துள்ளோம்." -*

இதேநேரம் இந்த மாவீரர் துயிலுமில்லத்தில் ஏதோ ஒரு இடத்தில் அழுது கொண்டிருப்பார்கள் எனது குஞ்சம்மாவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குஞ்சையாவும். எனது இளமைக் காலங்கள் நினைவுக்கு வருகின்றன. இவர்களின் மகன் நக்கீரன் (செந்தில்குமரன்) அப்போது பிறக்கவில்லை. (ஆறு பெண்பிள்ளைகளுக்கு பின்னே இவன் பிறந்தான்) ஒவ்வொரு பிள்ளையும் பிறக்கும் போது இது ஆண் பிள்ளையாக இருக்காதா என்ற எதிர்பார்ப்பிருக்கும். இனி ஆண் பிள்ளையே பிறக்காது- தமக்கு இறுதிக்கடன் செய்ய ஆண் பிள்ளை இல்லையே என்று குஞ்சையாவுக்கு ஒரு ஏக்கம். அதனால் அவர் என்னுடன் கூடியளவு பாசத்துடன் இருந்தார். ஒருநாள் எனக்குத் தேவையான பழவகைகளை வாங்கித்தந்து ''குஞ்சையாவுக்கு கொள்ளி வைப்பியா மனா?'' என்று கேட்டார். நானும் 'ஓம்'' என்றேன். அவருக்கு மகிழ்ச்சி தாளவில்லை. அதன் பிறகு எனது தேவைகளை நிறைவேற்றுமிடத்தை நான் தெரிந்து கொண்டேன். ஒவ்வொரு தடவையும் அவர் என்னைக் கேட்பார் ''குஞ்சையாவுக்கு என்ன செய்வாய்?'' - ''கொள்ளி வைப்பன்'' - இதன் தாக்கம் விளங்காது பதில் சொல்லும் வயது.

ஏழாவதாகச் செந்தில் குமரன் பிறந்தான் அவன் மீது பாசமாகக் கொட்டி வளர்த்தார்கள். நானும் வளர்ந்துவிட்டேன். அப்போதெல்லாம் இந்தப் பழைய சம்பவத்தை எனது குடும்பத்தாரிடம் சொல்லிச் சிரிப்பேன - ''இப்ப குஞ்சையா செத்து நான் கொள்ளிவைக்கப்போனால் குஞ்சையா பெட்டிக்குள்ளால எழும்பி ''ஏன் நீ கொள்ளி வைக்கிறாய். செந்தில் எங்கை போட்டான்'' எண்டு கேட்பார் என்று சொல்லிச் சிரிப்பேன்.

அவன் இயக்கத்துக்குப்போய் மாவீரர் ஆனதும் நான் அங்கே போனேன். அப்போது அவர் 'டேய் நீ, சின்னனாய் இருக்கேக்கை குஞ்சையாவுக்குக் கொள்ளி வைப்பனெண்டெல்லோ சொன்னனீ.. வைப்பாய் தானே'' என்றார்.

புரியாத வயதில் சொன்ன அந்த வார்த்தைகளில் இத்தனை அர்த்தமா?... இத்தனை தாக்கமா...? தொடர்ந்து பாடல் ஒலிக்கிறது ..

''.... ....... ..............அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம''

- அடிபட்ட பந்தாக மீண்டும் சீலனை நோக்கி நினைவுகள் ..... சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதல் - மேல் மாடியில் காலில் காயப்பட்ட சீலன் காலை இழுத்துக்கொண்டு வருகிறான் - றிப்பிட்டரையும் இழுத்துக்கொண்டு - இயலாத நிலையில் மாத்தயாவிடம் றிப்பிட்டரை கொடுத்துவிட்டு அந்த பொலிஸ் நிலைய வளவில் தேங்கியிருந்த மழைத்தண்ணீரைக் குடிக்கிறான். தொடர்ந்து படுத்தபடியே அவனது உத்தரவுகள் ''ஒன்றையும் விடக்கூடாது. எல்லாத்தையும் ஏத்தவேணும்'' - இயந்திரமாக இயங்குகின்றோம். எல்லாவற்றையும் ஏற்றியதும் மினிபஸ் புறப்படுகிறது அழுதபடியே ரஞ்சன் காயப்பட்ட எல்லோரையும் கொஞ்சுகிறான். (சீலன், புலேந்திரன், ரகு) எல்லோரையும் காப்பாற்ற விரைவாக வாகனத்தைச் செலுத்துகிறான் சங்கர். இன்று இந்தத் தாக்குதலில் கலந்து கொண்டவர்களில் ரகுவும், ராமுவும் இயக்கத்தில் இல்லை. நானும், மாத்தயாவும் மட்டுமே இயக்கத்திலிருக்கிறோம். அன்று மற்றவர்கள் காயப்பட்டதற்காக அழுத ரஞ்சன் உட்பட ஏனைய அனைவரையும் தொலைத்துவிட்டு நிற்கிறோம். அதே வரிகள் மீண்டும்

........................... ..... அன்று
செங்களம் மீதிலே உங்களோடடிய
தோழர்கள் வந்துள்ளோம்

வரிசையாக நினைவுக்கு வருகின்றனர். 'யாழ்ப்பாணத்துக்கு வெளியில அடிக்க வேணும்'' என்று அடிக்கடிகூறும் செல்லக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிளியம்மான்.

உமையாள்புரத்தில் இராணுவத்தினர் ஓடும்போது சிரித்தபடியே "துரத்துங்கோடா" என்றபடியே அவர்களின் ட்றக்கில் ஏறிய செல்லக்கிளியம்மான் ...... கமுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதலில் "அம்மாட்டச் சொல்லுங்கோ நான் சண்டையிலதான் செத்தனெண்டு" என்று சொன்ன பரமதேவா, ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில், கடுமையாகச் சண்டை நடந்துகொண்டிருக்கும்போது "ரெண்டு கிறினைட் தாங்கோ, நான் உள்ளுக்கை போய்க் காட்டுறன்" என்று சொன்ன விசாகன், "அண்ணை ஒரு சக்கைக் கானைத் தாங்கோ நான் கொழுத்திக் கொண்டு போய் உள்ளுக்கை வச்சிட்டு வாறன்" என்று சக்கைக்கானை வாங்கிக் கொண்டு துப்பாக்கி வேட்டுகளுக்கிடையே பொலிஸாருக்கு மத்தியில் அதை வைத்து விட்டு வந்த கமல் ..... இன்னும் எத்தனை எத்தனை .....

*"எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை*
*இங்கே திறவுங்கள்.*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே*
*மறுபடி உறங்குங்கள்"*

தவிக்கும் மனதின் வார்த்தைப் பிளயபு இது. எனக்கு இதற்கும் மேல்...... "ழ" கரம் "ல" கரம் வித்தியாசமில்லாமல் மழலையாக ஒலிக்கும் சீலனின் வார்த்தைகளைக் கேட்கவேண்டும் போல் இருக்கிறது.

*"நள்ளிரா வேளையில் நெய் விளக்கேற்*
*- றியே*
*நாமுமை வணங்குகின்றோம்"*

பசீனுக்கு எப்போதும் சந்தேகம் — இந்த சயனைட் வேலை செய்யுமாவென்று அடிக்கடி கேட்பான் "அண்ணை இது வேலை செய்யுமோ"— "அது வேலை செய்யும் நீ போடா" —வல்வெட்டித்துறைக்கு அனுப்பி வைப்போம். நாம் எத்தனைதரம் சொன்னாலும் அவனுக்குத் திருப்தியில்லை.

ஒரு நாள் நள்ளிரவு, களைத்துப்போய் வந்த நான் படுக்கப்போகிறேன். அப்போதும் கேட்கிறான். "அண்ணை இது வேலை செய்யுமோ"— எனக்கு எரிச்சல் "வேலை செய்யாது போல கிடக்கு ..... உன்னிலதான் ரெஸ்ற் பண்ணவேணும் ... போய்ப் படடா"—

அவன்தான் எமது இயக்கத்தில் முதன் முதல் சயனைட் உட்கொண்டவன். அந்தச் செய்தி கிடைத்ததும் நான்...... "இந்த வாயால இனி எதுவும்....."

*"எங்கே எங்கே ஒருதரம் விழிகளை*
*இங்கே திறவுங்கள்*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே*
*மறுபடி உறங்குங்கள்"*

கண்ணால் காணமுடியவில்லைதான், ஆனால் மனதில் அனைவரது முகங்களும் .. அங்கிருந்து நகர்கிறேன்.

*"உயிர்விடும் வேளையில் உங்களின்*
*- வாயது*
*உரைத்தது தமிழீழம் — அதை*
*நிரைநிரையாகவே நின்றினி விரைவினில்*
*நிச்சயம் எடுத்தாள்வோம்"*


என்ற வரிகளை மனதில் சுமந்தபடி அங்கிருந்து நகர்கிறேன். கடந்த வருடத்தைப் போலவே அங்கு பலர் மயங்கி விழுகின்றார்கள் முதலுதவிப் படையினர் அழைக்கப்படுகின்றனர். அறிவிப்பாளரின் மொழியில் கூட சோகம்....

உலகத்தில் எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் இப்படியொரு காட்சியைக் காணமுடியாது என்று என மனது சத்தியம் செய்கிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# சிறுமி ஜெங்

சீன மொழியில்:- சுன்லி [SUNLI]

தமிழில்:- ந. சுரேந்திரன்

1942ம் ஆண்டு இலையுதிர் கால முடிவில் ஹீபி மாகாண மத்தியபகுதிக்கு ஒரு குதிரைப்படை வந்து சேர்ந்தது. வடசீனாவில் கம்யூனிஸ்ட் எட்டாவது போர்முனை ராணுவம் கொண்டிருந்த முதலாவது குதிரைப் படை இதுதான்.

விரைவில் ஞாபகார்த்தக் கூட்டங்கள், ராணுவ அணிவகுப்புக்கள், மக்கள் கூட்டங்களில், இந்த அணியின் கலை நிகழ்ச்சிகள் கிராமமக்களின் விருப்பத்துக்குரிய களியாட்டங்கள் ஆயின.

அந்த அணியின் குதிரைகள் வலிமை மிக்கதாக இருந்தன. அந்தப் படையின் வீரர்கள் மிக இளைஞர்களாக இருந்தனர். அவர்களுடைய தலைவன் கூட- யாங் என்று அழைக்கப்படும் அந்த அன்பு சுரக்கும் இளைஞன் - 21 வயதுக்கு மேல் இருக்கமாட்டான்.

''அந்தக் கறுப்புக் குதிரையில் இருப்பவன்தான் கப்டன் யாங். அணிக்கு முன்னால் மூன்று ஆயுதங்களை முதுகில் சுமந்து செல்பவன்தான் சிறிய ஜின். சற்று அந்தச் சிறுவனைப் பாருங்கள்! குதிரையோடு ஒட்டிக் கொண்டாற்போல் சவாரி செய்கின்றான்.''


சிறிய ஜின் தனது 17 வயதில் ராணுவத்தில் சேர்ந்தான். தற்போது 19 வயதில் கப்டன் யாங்கின் செய்தி காவுபவனாகவும், அவரது சேவையாளனாகவும் கடமை செய்கின்றான். யப்பானியர்களிடம் இருந்து கைப்பற்றிய பழுப்பு நிறமான, வெளிநாட்டு உயர் சாதிக் குதிரையில் அவன் சவாரி செய்கின்றான்.

''அவர்கள் யப்பானியர்களிடம் போரிடச் செல்கின்றார்களா? அல்லது சாதாரண அணிவகுப்பில் செல்கின்றார்களா?'' அருகில் உள்ள பெண்மணியிடம் ஒரு இளம் விவசாயி கேட்டான்.

''அவர்கள் யுத்தத்துக்குப் போகின்றார்கள் என்று தான் நினைக்கின்றேன்.''

www.tamilarangam.net





''உனக்கு எப்படித் தெரியும். கப்டன் உன்னிடம் சொன்னாரா?''

''எனக்கு சிறிய ஜின்னைத் தெரியும் நீர் சும்மா கவனித்துப் பாரும் அவன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு சென்றால் அவர்கள் சாதாரண அணி நடையில் செல்கிறார்கள் என்று பொருள் அவனது முகத்தில் புன்னகை தெரிகின்றது. அதை அவன் கட்டுப்படுத்த முயல்கின்றான் என்றால், அவர்கள் யுத்தத்துக்குப் போகின்றார்கள் என்று பொருள்''

சிறிய ஜின் முன்னணியில், குதிரையில் புன்னகையுடன் வந்து கொண்டிருந்தான். அவன் அன்று மகிழ்ச்சிகரமான அன்பளிப்பு ஒன்றைப் பெற்றிருந்தான்.

சூரியன் அப்பொழுது தான் அடிவானத்தில் இருந்து எழுந்து கொண்டிருந்தான். சேவல்களின் கூவல் ஒலி கிராமங்கள் தோறும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

''சிறிய ஜின்! சிறிது வேகமாகச் செல்! பொழுது படு முன்பு நாம் சிபூஷன் கிராமத்தில் முகாமிட வேண்டும்'' கப்டன் அவசரப் படுத்தினான்

''இந்த வேகத்தில் சென்றாலே நாம் பொழுது சாய்வதற்கு வெகு நேரத்துக்கு முன்பே அங்கு சென்று விடுவோம்.''

''அதுவரை இந்தக் கொடிய வெயிலில் நீ ஊர்ந்து கொண்டிருக்கப் போகின்றாயா? எனக்குத் தாகமாக வேறு இருக்கின்றது.''

''அதோ தெரிகின்ற மயானத்துக்கு அப்பால் ஒரு பூசணித் தோட்டம் இருக்கின்றது. நான் ஒரு பழத்தை அங்கு வாங்குகின்றேன். அதன் சொந்தக்காரன் எனது கூட்டாளி. ஆனால் பிரச்சினை என்னவென்றால் அவன் பழத்துக்குக் காசு வாங்கமாட்டான். வெள்ளரிப்பழங்கள் இன்னும் சரியாக முற்றவில்லை. உங்களுக்கு இனிய வத்தகப்பழம் ஒன்று வாங்கித் தருகின்றேன்.''

''மக்களிடமிருந்து நாம் எந்த அன்பளிப்புக்களையும் பெற்றுக் கொள்ளக் கூடாது. எனக்குத் தண்ணீர்ப் போத்தலைத் தா!''

சிறிய ஜின் தனது முதுகுப் பையில் இருந்து ஒரு பொருளை உருவி, குதிரையின் விலாப்புறத்தில் அடித்தான், குதிரை வேகம் அதிகரித்தது.

கப்டன் தனது குதிரையின் வேகத்தை அதிகரித்த வண்ணமே ''அது என்ன பொருள்'' என்று ஜின்னிடம் கேட்டான்.

''இது ஒரு சவுக்கு'' ஜின் அதை ஆட்டிக் காட்டினான். அது ஒரு பல வண்ணப் பட்டுத் துணியாலான சிறிய சவுக்கு.

''மடையா! இதை எங்கே எடுத்தாய்! நாங்கள் குதிரைப்படை வீரர்கள். எங்களுக்கு எதற்கு சவுக்கு? நாங்கள் இரு கைகளாலும் போரிட வேண்டியவர்கள். எங்களுக்கு அது தேவையில்லை. நாங்கள் ஒரு கிராமத்துக்குள் நுழைகின்றோம். சனங்கள் உன்னைப் பார்த்துச் சிரிக்கப் போகின்றார்கள். அதைத் தூக்கி எறி.

இதை நீ வாங்கினாயா? அல்லது இதைச் செய்து தருமாறு யாரிடமாவது கேட்டாயா?''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''இல்லை இது ஒரு இளம் பெண் செய்தது. அவள் எனது பக்கத்து வீட்டுக்காரி. நாங்கள் ஒன்றாகவே வளர்ந்தவர்கள்.''

அதற்கு மேல் கப்டன் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் கழித்து ''அடுத்த முறை நீ விடுமுறையில் வீடு போகும் போது, அல்லது நாங்கள் உனது கிராமத்தைக் கடக்கும் போது அவளுக்கு நன்றி கூற மறந்து விடாதே'' கப்டன், ஜின்னுக்கு அறிவுறுத்தினான்.

இரண்டு நாட்கள் கழித்து இந்தக் குதிரைப்படை யப்பானியர்களோடு மோதியது. அது ஒரு தியாக யுத்தம் எதிரியின் 'பூண்டுகளையும் நடவடிக்கை'க்கு எதிரான திருப்பித் தாக்குதல் யுத்தம். அன்று சூரியன் மறைந்து முழுவானமும் கறுக்கும் வரை அந்த யுத்தம் நீடித்தது. கப்டன் யாங் களப்பலியானான். சிறிய ஜின் காயமடைந்தான்.

ஜின் தனது கைகளாலேயே குழிதோண்டிக் கப்டனை அடக்கம் செய்தான். துவக்கில் தோட்டாக்கள் இல்லாத நிலையில் அந்த 'சுற்றி வளைப்பில்'' இருந்து, விடுபட்டு அன்று இரவு வீடு திரும்பினான் ஜின்.

59 வயதான ஜின்னின் தந்தைக்கு ஒரே மகன்தான் ஜின். அவர் தனது வீட்டின் அருகே ஒரு பதுங்கு குழி சுரங்கம் ஒன்று அமைத்திருந்தார். அந்தச் சுரங்கத்தின் வெளிப்பாதை அருகில் வீடு ஒன்று இருந்தது. அந்த வீடு வேறுயாருடையதுமல்ல. ஜினுக்கு சவுக்குச் செய்து கொடுத்த சிறுமி ஷெங்குடையது தான்.

ஒரு நாள் சிறிய ஜின்னின் தந்தை சிறுமி ஷெங்கின் தாயாரிடம் ஒரு சீலைத்துண்டைக் கொண்டு சென்று அதைத் தைத்து உதவுமாறு கோரினார்.

''இதை ஒரு உதவி என்று கூறாதீர்கள். நாங்கள் உறவினர்களாக இல்லாவிட்டாலும் ஒரே குடும்ப உறுப்பினர்கள் போன்றவர்கள். அத்தியாவசிய வேலைகளை வீட்டில் செய்வதற்கு ஒருவரும் இல்லாதிருப்பது எவ்வளவு கடினம என்பது எனக்குத் தெரியும். துணியை அங்கே வையுங்கள். நான் தைத்துத் தருகிறேன்.''

அன்றிலிருந்து இந்த இரண்டு வீடுகளிடையேயும் நல்லுறவு உண்டாயிற்று.

சிறிய ஜின் போர்க்களம் இருந்து மீண்டபோது சிறிய ஷெங்கின் தாய் அவனைத் தனது கரங்களால் அரவணைத்தாள். அவனது கிழிந்த சீருடையைத் தட்டிக் கொடுத்தவாறே, ''யுத்தத்தில் நீ எவ்வாறு தவழ்ந்து உருண்டிருப்பாய். உனது புதிய ரியூனிக் உடை எவ்வளவு கந்தலாகிவிட்டது. ஷெங்! உனது சகோதரனுக்கு ஒரு மாற்று உடை கொடு'' என்று மகளிடம் உத்தரவிட்டாள்.

''அந்த இரத்தக்கறையைப் பார்! இவ்வளவு இரத்தமும் நீ சிந்திய இரத்தமா?''

''சிறிதளவு இரத்தம் என்னுடையது. மற்றவை எனது தோழர்களுடையது'' சிறிய ஜின் பதிலளித்தான்.

சிறிய ஜின் அன்று வீட்டில் பதுங்கு குழியில் தங்கினான்.

எதிரி ஊயல் வெளி முழுவதிலும் ''பின்னல வலை'' தேடுதலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ாடு சென்று
ாறு கோரி

ஏன்று கூறா
வினர்களாக
ர குடும்ப
ர்கள். அத்தி
ட்டில் செய்
ருப்பது எவ்
ு எனக்குத்
கே வையுங்
க்கிறேன்.''

இரண்டு வீடு
வு உண்டா

ளம் இருந்து
ங்கின் தாய்
ளால் அரவ
கிழிந்த சீரு
டுத்தவாறே,
தவழ்ந்து
புதிய ரியூ
கந்தலாகிவிட்
கோதரனுக்கு
ாடு'' என்று
ள்.

றையைப் பார்!
சிந்திய இரத்

ம் என்னுடை
தோழர்களு
திலளித்தான்.

ட்டில் பதுங்கு

முழுவதிலும்
தேடுதலை

ஆரம்பித்தான். அந்தக் கிராமம் அவர்களது படைத்தளம் ஆகியது. அவர்கள் ஒவ்வொரு வீட்டையும் துருவித் துருவித் தேடினார்கள்.

அன்று சிறுமி ஷெங் உணவுத் தட்டோடு உள்ளே வந்தாள்.

''எப்படி இருக்கின்றாய் ஜின்''

''நான் இப்படியே இருந்தால் கெதியாகச் சாகப் போகிறேன். யப்பானியத் துருப்புக்கள் இந்த இடத்தில் காலூன்றி விடப் போகின்றார்கள். நாம் அவர்களுடன் போரிடா விட்டால் அவர்கள் இந்த இடத்தை விட்டு அசைய மாட்டார்கள்.'' சிறிய ஜின் பொருமினான்.

''கப்டன் யாங் இறந்து விட்டாரா?'' சிறுமி ஷெங் அவனிடம் கேட்டாள்.

''ஆம்! அவர் எப்போதும் என் நெஞ்சில் நீக்கமற நிற்கிறார். நான் அவரோடு இரண்டு வருடங்கள் இருந்துள்ளேன். நாங்கள் இருவரும் ஏறத்தாழ சமவயதினர்தான். அவர் இப்போதும் உயிரோடிருப்பது போலவே நினைக்கின்றேன். ஆனால் உண்மையில் நான் கனவுலகில்தான் சஞ்சரிக்கின்றேன். அவரை இனி ஒருபோதும் நான் பார்க்க முடியாது.''

''அவருடைய முகம் இன்னும் என் நெஞ்சில் பசுமையாக உள்ளது. அன்று உன்னோடு எங்களுடைய வீட்டுக்கு வந்த பொழுது அவரை நான் பார்த்தேன்'' சிறுமி ஷெங் கூறினாள்.

''அவரது மரணச் செய்தி அவரது குடும்பத்திற்குத் தெரிந்திருக்குமா? அவர்களுக்கு அந்தச் செய்தி எவ்வளவு வேதனையைத் தரும்'' சிறுமி ஷெங் கூறினாள்.

''அன்று யுத்தத்தில் ஏனைய போர்வீரர்கள் பின்வாங்குவதற்காக கப்டன் யாங்கும், நானும் கவர் கொடுத்தோம். பின்பு நான் காயமுற்றேன். எதிரி ஒருவன் என்னை நோக்கி விரைந்தான். பின்னால் இருந்த கப்டன் தடுப்பு அரணை விட்டு வெளியே வந்து அவனோடு கைகலந்தார். யுத்தத்தில் அவரது துணிவுக்கு இணையீடு இல்லை. அவர் எங்களை எப்போதும் கவனமாக இருக்கும்படி கூறுவார். தன்னைப் பொறுத்தவரை கடுமையாக இருக்கும் அவர், ஏனையோருக்கு மிகுந்த இரக்கம் காட்டுவார். ஒரு நாள் அணி வகுப்பில் சென்ற போது அவர் தாகமாக இருந்தார். அவருக்கு ஒரு வத்தகப்பழம் பெற்றுத் தருவதாகக் கூறினேன். ஆனால் அவர் மறுத்துவிட்டார்.''

''ஏன் வத்தகப்பழம் சாப்பிடுவது கூடாதா?''

''இல்லை! அவர் பொது மக்களிடம் இருந்து எதையும் எடுக்க விரும்பமாட்டார். அது மட்டுமல்ல எங்கள் அணியில் அவர் மட்டும் தான் தாகமாக இருக்கவில்லை என்பதையும் அவர் அறிவார். எமது மனதில் உள்ளதை சட்டென்று கிரகித்துக் கொள்வார். அதே நாளில் நீ பரிசாகத் தந்த அந்த வண்ணச் சவுக்கை வைத்து விளையாடியதற்காக என்னைக் கண்டனம் செய்தார்.''

''அது, தமாஷாகக் கொடுக்கப்பட்டது. அதற்காக ஏன் கண்டிக்க வேண்டும்.''

''அது ஒரு போர் வீரனுக்குப் பொருந்தாத ஒன்று. நான் அதை உடனே எறிந்து விட்டேன். ஆனால் பின்பு வந்தச் சவக்கைச் செய்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்ததற்காக உனக்கு நன்றி கூறச் சொன்னார்.''

''உனக்குக் கண்டனம் பெற்றுத் தந்ததற்காக எனக்கு நன்றி கூறாதீர்'' சிறுமி ஷெங் வாய் விட்டுச் சிரித்தாள். ''அவரது இழப்புக்கு நாம் பழிவாங்கவேண்டும் நீ விரைவில் குணமடைய வேண்டும்.''

பதுங்கு குழியை விட்டு சிறுமி ஷெங் வெளியே வந்த போது அவள் தனது தாயிடம கூறினாள். ''அம்மா! சிறிய ஜின்னுக்கு நாம் கொஞ்சம முட்டைகளும் நூடில்ஸும் வாங்க வேண்டும்.''

''ஆக்கிரமிப்பாளர்களுடைய புண்ணியத்தில் இந்த வருடம் வசந்த காலத்தில் அறுவடை செய்வதற்கு நாம கோதுமை எதுவும் விதைக்க வில்லை. அத்தோடு இன்றுள்ள சூழ் நிலையில் நாம் ஒருவரிடமும் கடன் வாங்கவும் முடியாதே?''

''நாம் ஒரு துணியை நெய்து விற்போமா அம்மா.''

''நாங்கள் எப்போதும் ஓடுவதும் ஒழிவதுமாக இருக்கிறோம். நாம் தறியை இயக்கத் துவங்கியவுடன் யப்பானியப் பிசாசுகள் உடனே உள்ளே நுழைய மாட்டார்களா?''

''அப்படியில்லாவிட்டால் நாம் எதையாவது விற்றுப் பணமாக்கக் கூடாதா அம்மா? ஜின்னுடைய உயிரைப் பாதுகாப்பது நமக்கு முக்கிய மில்லையா?''

''நான் அவனை உனது சகோதரனாகவே நேசிக்கிறேன். ஆனால் இந்த ஏழையின் வீட்டிலுள்ள எந்தப் பொருளை விற்றுக் காசாக்க முடியும்? பெறுமதியான ஒரு பொருளும் நம்மிடம் இல்லையே குழந்தாய்?''

''ஏனம்மா எனது மேலாடையை (COAT) விற்றால் என்ன?''

''உன்னுடைய அந்தப் பட்டு மேலாடையையா? உனது திருமண உடையை திருமணத்திற்கு முன்பே விற்கப்போகின்றாயா?'' தாய் பதைபதைத்தாள்.

''நாம் எப்போதும் ஓடி ஒழிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே தற்போது அதை நான் அணிய வாய்ப்பில்லை. அது ஒன்று புதைத்துள்ள இடத்தில் செல்லரித்துப் போகும். அல்லது எதிர்த்துருப்புக்கள் கொள்ளை அடித்து விடுவார்கள். ஆகவே அதை நாம் விற்றுக் காசாக்கினால் என்ன?''

''நல்ல மாப்பிள்ளை கிடைத்தால் உனக்குத் திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். அந்த மேலாடையை நீ விற்கக் கூடாது'' தாய் ஏக்கத்துடன் கூறினாள்.

''ஆனால் ஜின்னுக்கு இன்று மாலையில் கொடுப்பதற்கு பொருத்தமான, புஷ்டியான உணவு எதுவும் இல்லையே அம்மா. அவனுக்குக் கஞ்சியையா கொடுப்பது? இன்று சந்தை நாள். போய் அந்த மேலாடையை விற்றுச் சாமான் வாங்கிவா''

இறுதியாக மகளின் பிடிவாதம் தாயை சந்தைக்கு அனுப்பியது. அன்று பகல் முழுவதும் அந்த மேலாடையை கையில் பிடித்துக் கொண்டு ஒரு சந்தியில் அந்தத் தாய் நின்றாள். பின்னேரத்தில் யப்பானியர்களுக்கு கைக் கூலி வேலை செய்யும் ஒருவன் வந்தான். அவனது ஆசைநாயகிக்காக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவன் அதை வாங்கினான். விலை பற்றி விசாரிக்கத் தைரியமில்லாமல் அவன் கூறிய விலைக்கு விற்று விட்டாள் கிடைத்த பணத்தில் நூடில் ஸும் 10 முட்டைகளும் வாங்கினாள். அந்த மேலாடையை விற்ற மனத் தாக்கத்தால் அவள் அன்று நேரத் துடனேயே படுக்கைக்குச் சென்று விட்டாள்.

சிறுமி ஷெங் உடனடியாக ஜின் னுக்கு இரவு உணவைத் தயாரிக்கத் துவங்கினாள். சமையல் முடிந்ததும் உணவை ஜின்னிடம் எடுத்துச் சென் றாள் அன்று சிறிய ஜின் நன்கு உணவு உண்டான் 2 கட்டி நூடில் ஸையும் 4 முட்டைகளையும் ஒரே மூச்சில் உண்டான்.

சாப்பிட்டவையோடு, 'நீ எப் பொழுதும் உங்களிடம் உள்ள உண வைத்தான் எனக்குத் தரவேண்டும். எனக்கு உணவூட்டுவதற்காக ஏன் உங் களுடைய மேலதிகப் பணத்தைச் செலவழிக்கிறீர்கள்?''

''எங்களிடம் பணம் ஏதும் இல்லை உனது சகோதரி உனக்கு சத்துணவு தருவதற்காக தனது திருமண மேலா டையை விற்றாள். இந்தச் செயலுக் காக உனது சகோதரியை ஒருபோ தும் மறந்து விடாதே'' ஷெங்கின் தாய் விம்மினாள்.

''சட்டவைது போர்முனை ராணு வத்துக்கு நாங்கள் செய்யும் ஒரு சாதாரணக் கடமை இது, இதற்கு நன்றியோ அல்லது நன்றிக் கடன் தீர்த்தலோ தேவையில்லை.'' அவ னது கோப்பைகளை அகற்றும் போது சிறுமி ஷெங் புன்முறுவலோடு கூறி னாள்.

அவன் பதுங்கு குழியில் விளக் கைப் பொருத்திவிட்டு ஏதாவது வித் தியாசமான சத்தம் வெளியில் கேட் கின்றதா என்பதை அவதானித்தான். மத்திய ஹீபெய் (HEBEI) சமவெ ளிப் பிராந்தியத்தல் என்னிலடங் காத் தாய்மாரும் குழந்தைகளும் துவக்குச் சத்தத்தைக் கேட்டு பயத் தோடும், வேதனையோடும் பல் வெளிகளில் இந்த இரவைக் கழிப் பவர்கள் என்பதைத் தனது மனக் கண் ணில் பார்த்தான்.

''நாம் ஏனையோரைக் காட்டி லும் அதிர்ஷ்டசாலிகள். தற்போதும நாம் நமது சொந்த சூட்டடுப்புப் படுக்கைகளில் (KANG) இருக்க முடி கின்றது. நீ தூங்கிவிட்டியா?'' சிறுமி ஷெங் சிறிய ஜின்னிடம் வினவினாள்.

''உனது அம்மாதான் உறங்கி விட்டார். அருசரி! நீ என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?''

''நான் ஒரு சோடி சப்பாத்துத் தைத்துக் கொண்டிருக்கின்றேன். பதுங்குகுழிக்குள் ஓடுவதும, வெளியில் வருவதுமாக இருக்கும் போது சப்பாத் துகள் விரைவாகத் தேய்ந்து போய் விடுகின்றன.''

''எனக் கென்றால் சப்பாத்துப் பிரச்சினை இல்லை நாள் முழுவதும பதுங்கு குழியில் தானே இருக்கின் றேன்.'' சிறிய ஜின் பரிதாபமாகக் கூறியபோது சிறுமி ஷெங்கின் தொண்டை அடைத்தது.

''நீ காயமடைந்து சுகமில்லாமல் இருக்கிறாய்! இப்போது எது பற்றி யும் யோசியாதே. உனது உடம்பைக் கவனித்துக் கொள். உடல் நலமான தும் ரயில் பாதைக்கு அப்பால் சென்று உனது ராணுவப் பிரிவைத் தேடிக் கண்டுபிடி அதற்குள் உனக்கும் ஒரு சோடி சப்பாத்துத் தைத்துத் தருகின் றேன்''

இந்தகைய இரவுகளில் எதிரி தனது வேலைகளை செவ்வனே செய்து கொண்டிருக்கின்றான். அருகிலுள்ள கிராமங்கள் நெருப்புக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றன. மத்திய ஹீபெய் மாகாணத்து அப்பாவி மக்களின் வயல் வெளிகளிலும் கிராமங்களிலும். காடுகளிலும், கைக்கோல் போர்களி லும் தேடுதல், திருடுதல், எரியூட்டு தல், கொலைசெய்தல் ஆகிய கடமை களை அவன் நிறைவேற்றிக் கொண் டிருக்கின்றான்.

இந்தச் சிந்தனையில் மூழ்கிய சிறுமி ஷெங்கின் கண்கள் அந்த இருளில் ஒளிவிட்டுத் தகதகவெனப் பிரகாசித்தன. □

www.tamilarangam.net

# தற்கொடை



முருகையன்

வள்ளுவரை நேற்று வழியிலே
கண்டேன் நான்.
வீட்டுக்கழைத்தேன்.
விறாந்தைக் கதிரையிலே
வந்திருந்து சற்றே மனந்திறந்து
பேசினார்

'ஆயிரத்து முந்நூற்று முப்பது
அருங்குறளும்
பாயிரத்தோடு பகர்ந்தீர்கள்,
வள்ளுவரே!
பின்னர் எதுவும் எழுத
நினைந்ததுண்டா?
சொன்னால் மிகவும் சுவையாய்
இருக்குமே!'
இப்படி நான் கேட்டேன்.
இவரோ சிரிக்கின்றார்.
'ஆற்றல் மிகுந்த அறிஞன் என்று
தான் என்னை
நானே கருதி நயந்து கொண்டு
வானுறையும்
தெய்வத் திரளின் இடையே
செருக்குடனே
தங்கி இருந்தேன்.
தமிழ்க்குலத்துச் செய்திகளை
ஆர்வமுடன் கேட்பேன் நான் —
ஆகாய ஓசையிலே!
தாயகச் செய்தி தவற
விடமாட்டேன்.'
ஏதேதோ எல்லாம் எடுத்து
விரிவாகப்
பேசினார் அந்தப் பெரிய
தமிழ்ப்புலவர்.

'முப்பால் தயாரித்து முன்பெமக்குத்
தந்தீர்கள்;
இப்பால் பருகுங்கள்' என்றேன்
இசைந்தெடுத்துப்
பாலைப் பருகிப் பரிவோடு
பேசுகிறார் —

'இல்லாப் பொருள் குறளில் இல்லை
என்று நான் இருந்தேன்'

'மெய் தானே, அய்யா!'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'விடு தம்பி, வீண் முகமன்'

'ஏனய்யா?'

'தம்பி, இந்த ஈழத்தமிழகத்தில்
காலை வைக்கும் மட்டும் தான்
அந்தக் கருத்தினை நான்
கொண்டிருந்தேன்'

'பின்னர்'?

'குறள்கள் புதியனவாய்ச்
செய்யத் தொடங்கி விட்டேன்'

'செய்தீரா, வள்ளுவரே?
புத்தம் புதிய குறள்கள்
புனைந்தீரா?

காட்டுங்கள், அய்யா;
நான் கற்கத் துடிக்கின்றேன்.'

சுத்த வெள்ளைத் தாளின்
சுருளொன்றைக் காட்டினார்.
'பத்துப் பத்தாகப் பல குறள்கள்
யான் இயற்றி
வைத்துள்ளேன்' என்றார்.

'வழங்கி அருள்க' என்றேன்.

'எல்லாம் தருதல் இயலாது;
கேட்டு விட்டாய்;
பத்துக் குறளைப் பரிசாய்த்
தருகின்றேன் —
இந்தா, பிடி' என்றார்.
இன்னும் ஒன்று சொல்லுகிறார்.
— 'தற்கொடை என்னும்
தலைப்பில் எழுதியுள்ளேன்;
தற்கொடை என்றால், தன்னுயிரை
மக்களுக்காய்
ஈதலே ஆகும்;

இதனை விளக்கியுள்ளேன்'
என்றார் புலவர்.
எழும்பி மெல்ல அப்பாலே
சென்றார்.
மறைந்தார்.
சிறந்த குறள் பத்தும்
இங்கே சரியாய் எழுதியுள்ளேன்
— பாருங்கள்.
அந்தப் புதிய அதிகாரம்.
காணுங்கள் —

## 2

தற்கொடை என்ப, தமிழீழ
மைந்தர்கள்
நிற்கும் புதிய நிலை.

தன்னுயிரைத் தான் ஈயும்
சான்றாண்மை தற்கொடையாம்
என்ன நிகர் ஆகும் இதற்கு?

ஓர்மம் உரமும் துறவும்
உறுதியுமே
கூர்மதியோர் ஆவிக் கொடை.

கற்கண் டினிது பழங் கள்இனிதே
என்பார்கள்
தற்கொடையின் தன்மை தெரியார்.

ஆவி கொடுக்கும் அசையாத்
திடம் கொண்ட
வாலிபர்கள் வாழ்வதிந்த மண்.

சொந்த மண் மீளச் சுடுகலன்கள்
ஏந்திடுவோர்
தந்திடுவார் தங்களுயிர் தாம்.

நஞ்சைக் கழுத்தில் நகையாய்
அணிவோரின்
நெஞ்சம் நிரம்ப நெருப்பு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெங்கொடுமைச் சாவும் விளையாட்டுக்
கூடமாம்
பொங்கு சினம் கொண்ட புலிக்கு.

அச்சம் அறியார்; அடங்கார்;
அவர்க்குயிரோ
துச்சம்; எதிரி வெறுந் தூள்

கொல்வோரை மோதிக் கொடுபட்ட
இன்னுயிரை
எல்லா உலகும் தொழும்.

**3**

தாடித் தமிழர் — உண்மைச்
சாரத்தை நல்ல குறட்
சாடியிலே தேக்கி வைக்கும்
தந்திரத்தைக் கையாளும்
மோடி தெரிந்த முனிவர்
மறை மொழியில்
ஓடும் தெளிவை உணர்ந்து
பயன் பெறுவோம்.

வள்ளுவரே எங்கள் வழிகாட்டி
நம்மவரின்
உள்ளமிசை ஊறும் ஒளி.

நாம் வன்முறை மீது மோகங் கொண்ட போர் வெறியர்கள் அல்லர். நாம் உண்மையில் ஆன்மரீதியாக, சமாதானத்தையே விரும்புகிறோம். ஒரு நிரந்தரமான, நிம்மதியான, கௌரவமான சமாதானத்தையே விரும்புகின்றோம். அதனால் தான் இந்தக் கொடூரமான போரின் மத்தியிலும், சமாதானத்தின் கதவுகளை நாம் திறந்து வைத்திருக்கிறோம். சமாதானத்தின் பாதையை நாம் மூடிவிடவில்லை; அப்படி மூடிவிடும் நோக்கமும் எமக்கில்லை. ஏனென்றால் சமாதானத்தை அடைவதற்காகவே நாம் போராடுகிறோம். என்றோ ஒரு நாள் எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளைத் தட்டுவானாக இருந்தால், நாம் எமது நேசக் கரங்களை நீட்டத் தயாராக இருக்கிறோம்.

தமிழீழ தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# என்னுடைய வெட்கம்

கிருஷ்ணா மங்கை

'விடியல்' முகாமின் முகப்பின் முன் வந்து இறங்கி சைக்கிளை நிறுத்தி விட்டுப் பார்க்கிறேன். யாராவது தெரிந்த முகங்கள்........ யாரும் தென்படவில்லை. முகாமின் சூழலை அவதானித்தேன். மரங்கள் அடர்ந்த சூழல்தான். மா, பலா, பனை, தென்னை மரங்கள் சூழ இருளடைந்தாற் போலும், பாதுகாப்பு மிகக்தாயும் காணப்பட்டது. பெரிய மாமரத்தின் கீழ் மகளிர் அணியினரின் 'ஜீப்', 'பிக்கப், 'வல்வ்', வாகனங்கள் எல்லாம் கரும்பச்சை நிறத்தில் மரங்களோடு மரங்களாய் நின்றன.

'சாளி' யில் இரண்டு பெண் போராளிகள் வந்து இறங்கி, என்னைப் பார்த்து விட்டு எதுவும் பேசாமல் உள்ளே செல்கிறார்கள். உள்ளே சென்று யாருடன் கதைப்பது என்று தடுமாற்றமாய் இருந்தது எனக்கு. சில வயதான ஆண்களும், பெண்களும் முகாமின் முன் கூட்டினுள் போடப்பட்ட கதிரைகளில் இருந்தனர். இவர்களும் என்னைப்போல் தங்கள் பிள்ளைகளைத் தேடியா? என்ற நினைப்பு எழுகிறது.

''என்ன அக்கா! அங்கையே நிக்கிறியள். உள்ளே வந்து இருங்கோ'' என்னை அவதானித்த பெண்ணின் குரல் கேட்டு உள்ளே சென்று அமர்கின்றேன்.

அந்தப் பெண்ணிடமே நான் வந்த விடயத்தைச் சொல்லலாம் என்றால் உள்ளே போனவள் திரும்பவில்லை. எனக்கு முன்னும் அக்கம் பக்கங்களிலும் இருப்பவர்களை நோக்குகின்றேன். காய்ந்து போய் கவலை தோய்ந்த முகத்துடன் எதிர்பார்ப்பு மிக்கவர்களாய் இருக்கும் அந்தப் பெற்றோர்களைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது எல்லோருக்கும் குளிர்பானம் கொண்டுவந்து தந்தார்கள். நீண்டதூரம் சைக்கிள் ஓடிக் காய்ந்து போன தொண்டையை நானும் நனைத்துக் கொண்டேன்.

வேகமாக வந்து வாசலில் நின்ற 'பிக்கப்' 'பிலிருந்து ஐந்தாறு பெண்கள் 'தொப் ... தொப்.....' என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குதித்து உள்ளே சென்று மறைந்தார்கள்.

''இவர்கள் எல்லோரும் எங்கை ஓடிமறைகிறார்களோ? இப்படி எங்களை காக்கவைத்துவிட்டு'' நான் முணுமுணுக்கிறேன்.

''என்ன பிள்ளை இப்பதானே வந்தனீர் நாங்கள் இதில எத்தினை மணித்தியாலங்களாய் இருக்கிறம்.'' ஒரு தாயின் சலிப்பு.

''அன்பழகியைப் பார்க்கவேணும் தங்கச்சி'' துள்ளல் நடையோடு துப்பாக்கியைத் தோளில் மாட்டியபடி தலையைக் கோதிக்கொண்டு வந்த பெண்ணிடம் கேட்டேன்.

''உள்ளே சுகந்தியக்காவிடம் கேளுங்கோ'' அவள் போய்விட்டாள்.

''யாரது சுகந்தி'' என விழித்துக்கொண்டிருக்கையில் அந்தப் பெரிய வராந்தாவின் தொங்கலில் இன்னொரு பெண்ணின் கையைப்பிடித்துக் கொண்டு வரும் பெண்ணைக் கவனித்தேன்.

''இவள்....... இவள் இங்கேயா? என் சிநேகிதியின் தங்கை.

''தமிழரசி!'' என்னை அறியாமல் அழைத்துவிட்டேன்.

எல்லோரும் சட்டென்று என்னையும், அவளையும் நோக்கினார்கள். தமிழரசி என்னைக் கண்டு சிரித்தபடி என்னை நோக்கி வந்தாள்.

''நீர் இங்கேயா இருக்கிறீர்? யாரோடு கதைப்பது, கேட்பது என்டு தெரியாமல் காத்துக்கொண்டிருக்கிறன். உமக்குத் தெரியுமோ? என்ர கணவரின் தங்கை உங்கள் அணியில் சேரவந்துவிட்டாள். இங்க கேட்டுப்பாக்கச சொன்னார்கள். உமக்கு அன்பழகியைத் தெரியுமா?'' நான் அவசரமாய் கேட்டேன்.

''தெரியுமக்கா! ஆனா நீங்கள் இப்ப அவவைப் பார்க்கமுடியாது'' என்று சிரித்தாள். களங்கமற்ற, காற்றின் சிரிப்பு.

''ஏன் இங்கை இல்லையா?'' உள்ளே நோக்கியவாறு கேட்டேன்.

''அன்பழகியைப் பயிற்சி முகாமுக்கு அனுப்பிவிட்டார்கள்.''

''ஓ!... அப்ப....'' மேலே பேசுவது தெரியாமல், ஏமாற்றத்துடன் தமிழரசியிடம்விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

''அன்பழகியை இனித் தேடுவதில் பிரயோசனமில்லை. அவளைப் பயிற்சி முகாமுக்கு அனுப்பிவிட்டார்களாம்.'' என்றேன் அலுத்துக்கொண்டபடி.

''என்ன...?'' என்று ஏக்கமுற்றவராய் இடிந்துபோயிருந்தார் அன்பழகியின் தாய். — என் மாமி.

''இப்பிடிச் செய்வள் எண்டு நான் கனவிலும் நினைக்கேல்லை. நல்லாய்ப் படிச்சாள். பல்கலைக்கழகம் வரை போவாள் எண்டிருந்தன். எல்லாத்தையும் பாழடிச்சுப்போட்டு போட்டாளே!'' புலம்பி அழுதுகொண்டு வராந்தாவில் படுத்திருந்தார். பிள்ளையைப் பிரிந்தவர் துவண்டிருந்தார்.

''என்ன செய்வது எல்லாம் நாங்கள் நினைக்கிறமாதிரியா நடக்குது'' நான் பெருமூச்செறிந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''படிப்பொன்றே பிரதானமாய், மற்றும் பொறுப்புக்கள் அற்றவளாய் திரிந்தவளுக்குப் போராடப் போக வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது? யாருடைய தூண்டுதல்களாய் இருக்கும்? அல்லது ஓயாத போராளிகளின் பிரசாரத்திலாலா? அல்லது இராணுவக் கொடுமையினாலோ ....'' இப்படியான யோசனையில் நான் ஆழ்ந்துபோயிருந்தேன்.

வருடம் மாறிவிட்டது. வைகாசி மாதக் காற்று பெயர்ந்து பலமாக வீசத் தொடங்கியிருந்தது. மரங்கள் சோழகத்தில் ஆடின. ஒன்றையொன்று துரத்தி ஓடும் முகில் கூட்டங்கள் அலை புரண்டாற்போல் திரண்டு தள்ளுப்பட்டுச் சென்றன. அதனூடே அவ்ரோக்களும், ஹெலிகளும் போக்கு வரத்துச் செய்துகொண்டிருந்தன. இவற்றைப் பொருட்படுத்தாமல் சைக்கிளில் பாரங்கட்டி நெஞ்சினால் நகர்த்திச் சென்றுகொண்டிருந்தனர் பலர்.

எப்போதும் போல் பலாலியிலிருந்தும் இடையிடையே பூநகரியிலிருந்தும் அடிக்கப்படும் ஷெல்லும், கடற்படையினரின் பீரங்கியும் இடைக்கிடை முழங்கிக் கொண்டிருந்தன.

அன்பழகி பயிற்சி முடித்து எந்த முகாமிற்கு சென்றுள்ளாள் என்பது எவருக்கும் தெரியவில்லை. நான்தான் மீண்டும் தமிழரசியைச் சந்தித்துத் தெரிந்துகொண்டேன். ஆனால் வீட்டில் எதுவும் சொல்லவில்லை சொன்னால் அவளின் முன்னால் போய் நின்று ''வீட்டுக்கு வா. உன்னுடைய அம்மா சாப்பிடாமல், தண்ணி குடிக்காமல் கிடக்கிறா?'' என்றெல்லாம் சொல்ல வேண்டிவரும். அவளின் சரியான முடிவின் முன்னால் போய் முகம் கொடுக்க எனக்குத் துணிவு வரவில்லை. எனக்கு அவளைச் சந்திக்கும் வாய்ப்பும் எட்டவில்லை. வீட்டு அலுவல் சீர்படுத்தப்படாமல் அலங்கோலமாய் இருந்தது. அவற்றை ஒருவாறு சீர்செய்து நிமிரவே சில நாட்கள் எடுத்தன. அவளின் அம்மா மெல்ல மெல்ல வழமையாகிக்கொண்டிருந்தாள். தன்ர பிள்ளையும் இயக்கத்திலை என்று சொல்வதில் ஒரு இதப்படுவதை அவதானித்தேன். இவற்றிடையே போராட்ட காலச் சிந்தனைகள் என்னுள் வலுவடைந்துகொண்டிருந்தன. அதனால்தான் அன்பழகி போனதையிட்டு நான் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை என உணர்ந்தேன். ஆனால் நான் சிறிதும் எதிர்பாராமலிருக்க என்னையே சாடிவிட்டு மௌனமாகப் போய்விட்ட மாதிரியான அதிர்வு, ஆச்சர்யம் என்னுள் வியாபித்தது.

அன்பழகி என் கணவனின் ஒரே தங்கை. அவளின் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் பண்டம் நிலம் எல்லாம் இருந்தன. என் மாமியாரின் அன்புக்கும் அரவணைப்புக்கும் ஆட்பட்டிருந்த மகள். அவளைப்பற்றியே அவர் பல்மாதிரிக் கனவுகளை வளர்த்துக்கொண்டிருந்த வேளை, இப்படித் திசை திருப்பிப் போய்விட்டாள். அவளையிட்டு ஏங்கியேங்கி உருகும் படியாக வைத்துவிட்டாள். வெளியூரில் வேலை பார்க்கும் கணவரோ செய்தி அறிந்து கவலைப்பட்டு எழுதியிருந்தார். அவளைக் கண்காணித்துக் கட்டுப்பாடாய் வைத்திருக்கவில்லை என்று குறை வேறு. அவளை நாங்கள் கண்காணிக்கும்படியாய் அவள் நடந்துகொண்டிருந்தால் தானே? இப்போது இருக்கும் போராட்டகால சூழ்நிலையை கண்காணாதவர், புரியாமல் எழுதியவை என்ற எண்ணமேற்பட்டது. ஆண்களால் மட்டுமல்ல பெண்களாலும் சாதிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாதது எதுவுமில்லை எனப் புறப்பட்டுவிட்டிருப்பவர்களை எவ்வகையாய் கட்டுப்படுத்துவதாம்? இதையிட்டு பெரிய விளக்கங்கள் எழுத வேண்டியதில்லை. காலம் பதில் சொல்லும் என்று விட்டுவிட்டேன். ஆனால் புரிந்துணரமுடியாதவர்கள் ''புலிக்குப் போய்விட்டாள்'' என்று புறமுதுகிடையே பேசினார்கள். கண்காணாததை கண்டது போல் பேசுபவர்களிடையே போராட்ட விளக்கங்கள் எடுபடாது தானே. மறுப்பெதுவும் சொல்லவில்லை நான்.

அன்பழகி ஒரு தடவையேனும் போராட்டம் பற்றிய எந்தக் கதையையேனும் என்முன் கதைத்ததில்லை. அதிகம் கதைக்காத அடக்கமான பெண்ணாய் இருந்தவள். அவள் சிநேகிதிகள் என்று யாரும் அவளைத் தேடிவந்து பேசியதை நான் பார்த்ததில்லை. என்னிடம் அவள் பேசுவதானால் கூட நான் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில். ஒரு சின்னச் சிரிப்பு. நானும் அவளுடன் அதிகம் அளவளாவுவதில்லை. என் வாயில் எந்நேரமும் போராளிகள், போர்க்களம், அகதிகள்முகாம், பொருளாதாரச் சீர்கேடு பற்றிய பேச்சுக்களே எழுவதுண்டு. இவற்றை என் சிநேகிதிகளுடன் மட்டுமே பேசுவேன். என் பேச்சுக்கள் சிலவேளை அன்பழகியின் செவிக்கு எட்டியிருக்கக்கூடும்.

''நீ திருமணம் செய்து ஒரு குழந்தைக்குத் தாயாகாவிட்டால் இப்போது ஒ[illegible] வீராங்கனையாகத் திரிவாய்'' எ[illegible]ன் ஆவேஷமான பேச்சுக்களி[illegible] சிநேகிதிகள் கூறக் கேட்டிருக்கக்கூடும்.

''உண்மைதான். பெண் போராளிகள் என்றொரு குழு ஆரம்பிக்கப்பட முன்னால் நான் திருமணப் பந்தத்திற்குட்பட்டுப் போய்விட்டதனால் அதிலிருந்து விடுபடமுடியாமல் இப்பிடிப் பேசிக்கொண்டிருக்கிறேன்'' என விட்டுக்கொடுக்காமல் நான் பேசியதைக் கேட்டிருப்பாள். என் இந்தப் பதில் உண்மையற்றது எனவும் புரிந்திருப்பாள்.

''உன்ர எட்டு வயது மகளுக்கு நாலைந்து வயது செல்ல உன் பேச்சுக்களால் புலிக்குப் போனால் என்ன செய்வாய்?'' சிநேகிதிகள் கேள்வி தொடர,

''என்னால் செய்யமுடியாமல் போன ஒன்றை மகள் செய்யப் புறப்பட்டு விட்டாள் எண்டு பெருமைப் படுவன்'' என சிரிப்பது......

''இது வெறும் பேச்சு. உன்ர கணவனுக்கு என்ன சொல்வாய்?''

''அவரின் தங்கைக்கு என்ன சொல்ல முடிந்ததோ அதை...'' என்று அவர்களுக்குச் சொன்ன போதிலும் உள்ளூர ஒரு பதைப்பு எட்டிப் பார்த்தது.

''நீ துணிச்சல்காரி'' என்றொருவரும்,

''இல்லை அசட்டுத் துணிச்சல்'' என மற்றொருவரும் சிரிப்பூடே சொல்ல......

''சரி! எப்படியாவது வைத்துக் கொள்ளுங்கள்'' என்றபடி ரியூசனுக்குச் சென்ற மகள் திரும்பி விட்டாளா என மனம் தேடலுற்றதும் நினைவில் வருகிறது. எனது பேச்சின் பொய் முகங்கள் என்னைக் கேலி செய்கிறதாகப்படுகிறது. எனினும் அவற்றிலிருந்து தோற்க விரும்பாதவளாக நான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போய்விட்ட
விடுபடமுடியா
பசிக்கொண்டிருக்
டுக்கொடுக்காமல்
கேட்டிருப்பாள்.
உண்மையற்றது
ாள்.

வயது மகளுக்கு
ல்ல உன் பேச்சுக்
போனால் என்ன
கிதிகள் கேள்வி

செய்யமுடியாமல்
ள் செய்யப் புறப்
ண்டு பெருமைப்
பது......

பேச்சு. உன்ர
சொல்வாய்?''

கைக்கு என்ன
அதை...'' என்று
ன்ன போதிலும்
பு எட்டிப் பார்த்

ரி'' என்றொரு

த் துணிச்சல்''
ரும் சிரிப்பூடே

வது வைத்துக்
றபடி ரியூசனுக்
ம்பி விட்டாளா
துதும் நினைவில்
பச்சின் பொய்
கேலி செய்கிற
லும் அவற்றிலி
ரும்பாதவளாக



மகளின் பிரிவால் என் மாமியார் உருக்குலைந்து போயிருந்தார். என் வற்புறுத்தலால் சாப்பிட்டேன் என்று பெயர் பண்ணுவது. அடிக்கடி அவளைப் பற்றி அரற்றிக் கொண்டே இருப்பது. அவரின் பொழுதாகி விட்டிருந்தது. அன்பழகியும், தாயும் என் நினைவுகளில் என்னையும், மகளையும் அவர்களில் காணுவதான பரிதவிப்பு அன்பழகி எப்போதாவது என்னைக் காணவல்லாது தாயைக் காண என்றாவது வரக்கூடும் என்ற என் எதிர்பார்ப்பு பொய்த்துக் கொண்டிருந்தது. தாய்ப்பாசத்தைக் கூடவா மறந்து அவ்வளவு தீவிரமாகி விட்டாள். தன் தாய்க்கு யார் ஆறுதல் என நினைத்தாள்? தாய் தன்னை எத்தனை கருத்தோடு கவனித்து வந்தாள் என்றாவது நினைக்கத் தோன்றாமல் போயிருக்குமா? எதிர்பாராமல் ஏதும் நிகழ்ந்தால் நான் என்ன செய்வேன் என யோசித்துப் பார்ப்பாளோ? ஓ! எல்லாவற்றிற்கும் அண்ணியும் அண்ணியின் குடும்பத்தினரும் இருக்கிறார்கள் என எண்ணமிருக்கக்கூடும். மாமியாருக்காக என்மனம் பச்சாதாபப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு தடவையாவது அதுவும் கடந்த பத்து மாத காலப் பொழுதில் வீட்டுக்கு வந்து போக அனுமதி கிடைக்கவில்லையா? அல்லது வந்து போக விரும்பவில்லையா? எனக்கும் அவள் மனக்கிடக்கை புரியவில்லை.

தன்னைக் கண்டதும் தாய் புலம்பி கண்ணீர் விடக்கூடும். தன்னை ஏமாற்றி மனமுடைய வைத்ததோடு தன் எதிர்காலத்தை பாழடித்ததைப் பேசக் கூடும். இவற்றினிடையே தான் என்ன சொல்லி ஆறுதல் படுத்துவது. போராட்டம் பற்றிய விளக்கங்கள் புரிபடாத அவளை மேலும் மனவருத்தப்பட வைப்பதை விரும்பாதவளாய்

இப்படியே எண்ணிக் கொண்டிருப்பதில் நாட்கள் மாதங்கள் ஓடின

நாங்கள் இருக்கும் ஊருக்கு அண்மையில் என்றால் நானாவது அவளைச் சந்தித்து வரலாம் என எண்ணி விசாரித்தால் அவளை கட்டைக்காட்டுப் பகுதிக்கு அனுப்பப்பட்ட செய்தி கிடைத்து மனக்கலக்கமடைய நேர்ந்தது

அடிக்கடி மோதல் நிகழும் பகுதி. பல போராளிகள் காயம் அடைந்த, வீரமரணமடைந்த செய்திகள் வருவதுண்டு.

என் கற்பனை தறிகெட்டு ஓடத் தொடங்கியது.

மெல்லிய உயர்ந்த சிவந்த தோற்றங் கொண்ட அன்பழகியின் அந்த நீண்ட கூந்தல் ஒட்ட வெட்டப்பட்டு நீலநிற சேட்டும் ஜீன்சும் அணிந்து இடையே பட்டிமாட்டி துப்பாக்கியை தோளில் ஏந்தி எந்தக் காப்பரணில் உள்ளோ... இல்லை எதிரியின் வரவை எதிர்நோக்கி எந்தப் பற்றை மறைவில் பதுங்கி, படுத்துக்கிடந்தோ, புற்றிலிருந்து சீறிப் புறப்பட்டு பழுத்துதிர்ந்த சருகுகளிடையே சரசரத்துச் செல்லும் பாம்புகளிடையே பாம்பாய் ஊர்ந்தோ ..... எனக்கு உடல் சிலிர்த்துக் கொண்டது. வேண்டாத கற்பனைகளையிட்டு மனம் வேகமாக அடித்துக் கொண்டது. சில நாட்களாக நானே அன்பழகியால் நிலைகுலைந்து போன மாதிரி.. ஏனோ தானோ என்று சமையல், சாப்பிடப் பிடிக்காமை. மகளின் படிப்பைக் கவனியாமை. அடிக்கடி சுருண்டு போய்க் கிடக்கும் மாமியாரின் நிலைக்காக பரிதாபப்பட்டு சலிப்படைந்து எல்லாம் வெறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தேன். கணவரிடமிருந்து இரண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாதங்களுக்கு மேலாய் கடிதம் காணாத ஏக்கமா? ஏனென்று நாளும் எழுதி விசாரிக்காமல் எப்படியிருந்தேன்? எதையெதையோவெல்லாம் இட்டு, மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கையில்......

நீண்ட நாட்களுக்குப் பின் என் தந்தை வரக் கண்டு முகம் மலர நோக்கினேன்.

ஆனால் தந்தையின் முகத்தில் மலர்ச்சியில்லை. துக்கமும் இல்லை. ஏதோ ஒன்று.

''ஏன் என்ன நடந்தது?'' புரியாமல் விசாரிக்கு முன்,

''சிவமதியும் உன் மைத்துனி போன இடத்துக்குப் போய் விட்டாள்'' தூரப்பார்த்தபடி கூறிப் பெருமூச்செறிகிறார். பிள்ளைப் பற்று குரலில் தெரிந்தது.

என்ன......'ஓ. எல்' திறமையாய் பாஸ் செய்து 'ஏ. எல்' படிக்கத் தயாராகிக் கொண்டிருந்தவளா? அவள் ஒரு கூண்டுப்பறவை என்றல்லவா நினைத்தேன். அவ்பழகியும் சிவமதியும் எல்லா வகையிலும் ஒற்றுமைப் பட்டவர்களா? ''என்ன அப்பா நம்ப முடியாமல்'' பதைபதைப்போடு கேட்டேன்.

''நம்பு நான் அவளைத் தேடிப் போக விரும்பேல்லை. அவள் போகட்டும் உன்ரை அம்மாவை வந்து சமாதானப்படுத்து'' வார்த்தைகள் உருகி வழிந்தன. மேற்கொண்டு எதுவும் பேசாமல் திரும்பினார்.

''அப்பா...... !'' அழைத்த எனக்கே என்ன பேசுவது என்று புரியாமல் தடுமாறிப் போய் நின்றேன்.

அப்பா நிதானமாக நடந்து கொண்டிருந்தார். □

●

இந்த இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் நாம் என்ன செய்வது? போராடி எமது மக்களையும், எமது மண்ணையும் பாதுகாத்துக் கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழி ஏதுவும் உண்டா?

போராடித்தான் நாம் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ளவேண்டும். சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டம் அல்ல. அது இரத்தம் சிந்தி வென்றுகொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு வே. பிரபாகரன் அவர்கள்

□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# இலங்கையில் வாழும் என் தமிழ்த் தோழி

கவிஞர் கண்ணதாசன்

தோழிநின் கடிதம் கண்டேன்
    துவண்டது நெஞ்சம்! ஐயோ!
ஈழவர் நாட்டில் நீயும்
    இன்புறுங் கணவர் தாமும்
ஆழியார் அலைகள் மோத
    அழிவதை எண்ணுங் காலை
பாழுமித் தமிழர் நாட்டின்
    'பாப'த்தை நினைக்கின் றேன்யான்!

எங்கெங்கோ போனான்; "வெற்றி
    ஏறுநான்" என்றான்! இன்று
அங்கங்கே தமிழ ரெல்லாம்
    'அவன்வேறு நான்வே றெ'ன்றார்
சிங்கம்போல் முன்னோன் சென்றான்;
    தீப்பசிக் குணவு தேடி
அங்கெல்லாம் பின்னோன் சென்றான்;
    அடங்கினன், ஒடுங்கி மாண்டான்.

தங்கமே! ஈழ நாட்டார்
    தாய்மொழி அழிப்ப தற்குப்
பொங்குவ தெழுதி யுள்ளாய்
    பொறுமினேன் படித்த போது!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3-572

இங்கென்ன வாழ்வு? தூய
எழில்மொழி வெட்டிச் சாய்க்க
இங்குள்ள தமிழ னேதான்
எழுகின்றான் கொடுவாள் தூக்கி!

என்னயான் சொல்வேன்; வாழும்
இருபது லட்சம் பேரும்
என்னவர்! எனது மூச்சு!
இழைபிரித் தெடுத்த பாகம்!
அன்னமே வருந்த வேண்டாம்!
'அழிவது தமிழே' என்று
சொன்னவர் அழியு மாறு
துவக்குக போரை! வெல்வோம்!

குருதியே ஓடி னாலும்
குடல்நிணம் சிதைந்த போதும்
பரிதியின் மாலை வண்ணம்
படைத்தது மண்ணென் றாலும்
வருதுயர் தமிழுக் கென்றே
'வாழிய' பாடல் பாடி
உறுதியில் இறங்கு! வெற்றி
உனக்கிது இயற்கை வேதம்!

மொழியின்றி விழிக ளில்லை
மூச்சில்லை பேச்சு மில்லை!
கழிசடை உடமை யாளர்
கருவிலே கயமை தோய்ந்தோர்
இழிமொழி வீசி னாலும்
எடுப்பிடி வேலை செய்து
அழிவுனக் கீந்த போதும்
அஞ்சிடேல் பண்பு குன்றேல்!

நாமெல்லாம் தமிழ் மக்கள்
நமக்குநாம் பாது காப்பு!
நாமெல்லாம் அழிவ தால்ஓர்
நாட்டினர் வாழ்வா ரென்றால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாமெல்லாம் வாழ்வ தற்கந்
நாட்டினர் அழிதல் நீதி!
நாமெல்லாம் அழிந்து எந்த
நாடிங்கு வாழும்! பார்ப்போம்!


தமிழர்கள் கெடுவ தொன்றே
தரணியின் முறையா? தூய
அமிழ்தொழித் தரக்கர் கூட்டம்
ஆள்வது சரியா? இல்லை!
தமிழுக்கும் தமிழ ருக்கும்
தடைபோடும் வெறியர் தம்மை
இமைவேறு கண்கள் வேறாய்
இருநூறு துண்டங் காண்போம்!

அங்கு நீ போர் துவக்கு!
அடுத்தபோர் தமிழர் நாட்டில்!
இங்குநம் மொழியைத் தாக்கும்
இந்திக்குப் பாடை கட்டி
சங்கெடும் பறைமு ழக்கி
சட்டியில் கொள்ளி தூக்கி
அங்குல எலும்பு கூட
அகப்படா தழிப்போம்! உண்மை!

தென்னவர் இந்தி கற்கச்
செப்புவோன் தமிழ னல்லன்!
அன்னையை வடவர் கூடி
ஆக்கிய கருவே அன்னான்!
சின்னதோர் இடையாய்! உன்னைச்
சிங்களம் படிக்கச் சொன்னால்
அன்னவர்க் கிதையே சொல்லு
ஆம்; இது தமிழ ரத்தம்! ☐

கவிஞர் கண்ணதாசன்
இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் எழுதிய கவிதை

www.tamilarangam.net



# சோதனை அலைகளைத் தாண்டிய துணிவுப் படகு

சாந்தி

1987-05-26 வடமராட்சியில்
''லிபறேசன் ஒப்பரேசன்''
தொடங்கி இரண்டாம் நாள்.
நான் வல்லவ அரசினர் வைத்தியசாலை
யில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.
இலங்கை இராணுவம் பலத்த எதிர்ப்பு
களுக்கும், இழப்புகளும் மத்தியில், ஆகாய,
கடல் தாக்குதல்களின் உதவியோடும்
டாங்கிகள் சகிதமும் கொஞ்சம் கொஞ்ச
மாக தொண்டைமானாறு இராணுவ முகா
மில் இருந்து முன்னேறிக் கொண்டிருந்தது.

அன்று அதிகாலை 5 மணியில் இருந்தே
ஹெலி, பொம்மர், அவ்ரோ ஆகிய மூன்
றும் தங்கள் இஷ்டம் போல் கண்மூடித்
தனமாக வல்வெட்டித்துறையில் சகல பகுதி
களிலும் குண்டுகளை வீசியும், றொக்கற்
தாக்குதலை நடத்திக் கொண்டும் இருந்தன.
இவ் கண்மூடித்தனமான தாக்குதலினாலும்
இராணுவம் முன்னேறிக் கொண்டிருக்கும்
காரணத்தினாலும், பதுங்குழியினுள் இருப்
பதற்கு மக்கள் பயந்தார்கள். இதன் நிமித்
தம் அவ்வூர்மக்கள் சகலரும் வைத்திய
சாலைக்குப் பாதுகாப்பைத்தேடி வந்து
கொண்டிருந்தார்கள். வைத்தியசாலைக்கு
அவ்வளவு துணிஞ்சு, கெதியாக, அநேக
மாக குண்டு போடமாட்டான் என்று மக்க
ளின் ஒரு சிறு நம்பிக்கை அந்த நேரத்தில்
வீண் போகவில்லை. எப்படியா எமது
வைத்தியசாலை குண்டு வீச்சுத்தாக்கு
தலுக்குள்ளாகவில்லை. ஆனால் ''அவ்றோ
வில் இருந்து போடப்பட்ட குண்டுகளில்
அநேகமானவை வைத்தியசாலையைச் சுற்றி
அண்மித்த பகுதிகளிலேயே வீழ்ந்து
வெடித்தன.

முன்னேறிய இராணுவத்தின் கண்
மூடித்தனமான 'ஷெல்' தாக்குதலினாலும்
தொடர்ச்சியான ஆகாய, கடல் தாக்கு
தலினாலும் போராளிகள் மட்டுமல்ல,
மக்கள் பலரும் படுகாயமுற்றனர். காய
மடைந்த சகலரும் உடனுக்குடன் செஞ்
ஜோன்ஸ் முதலுதவிப் பிரிவினால் எமது
வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்
டார்கள். எமது வைத்தியசாலையிலோ
ஒரே ஒரு கட்டிடம் தான் இரு மாடிகளைக்
கொண்டது. அவ் இரு மாடிகளில் மேலே
குழந்தைகள் வாட்டும் கீழே பிரசவ அறை
யுடன், பிரசவ வாட்டும் அமைந்துள்ளது.
உயிரைக்காப்பாற்றும் நோக்குடன் அவ்வூ
ரில் உள்ள சிறுவர்கள் முதல் முதியோர்
வரை அந்த இரண்டு மாடிக்கட்டிடத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



பகுதியான பிரசவ வாட்டினுள் டக்கலம் புகுந்திருந்தார்கள். இந்நிலை

இடநெருக்கடி காரணமாக நான் யமடைந்தவர்களை வெளிநோயாளர் விலுள்ள மருந்து கட்டும் அறையில் த்த அவர்களுக்குச் சிகிச்சை செய்து ண்டிருந்தேன். அவ் வேளையில் ஒரு ல் நாம் சிகிச்சை செய்து கொண்டி அறையின் யன்னலுக்கு அருகில் ளிப்புறமாக வீழ்ந்து வெடித்தது. சகல ழியர்களும் நிலத்தில் வீழ்ந்து படுத்து டார்கள். அச் ஷெல்லினால் யன்னல் ணாடிகள் நொருங்கியதுடன் நாம் ற அறையில் போடப்பட்டிருந்த மின் மிழ் (பல்பு) உடைந்து எம்மேல் கொட் பட்டது. எமது ஊழியர்கள் பதட்ட டந்துவிட்டார்கள். ஆகவே காயமடைந் ர்களை தூக்கிக் கொண்டும் ஸ்ரெச் ல் ஏற்றிக் கொண்டும் ஒரே ஒரு ஷெல் துகாப்பு இடமான பிரசவ வாட்டினுள் மும் புகுந்தோம். அங்கு போனபோது ல்வைக்க இடமில்லாதளவிற்கு நெருக் . ஒருவாறு நிலைமையை எடுத்துச் ால்லி, ஒரு சிறு இடம் ஒதுக்கி எடுத்து ல் 3 கட்டில்களைப் போட்டு காய டந்தவர்களோடு தொடர்ந்து சிகிச்சை த்துக் கொண்டிருந்தேன். அதே நேரம் ந்தவர்கள் இருவரையும் எம்மிடம் ாண்டு வந்து சேர்த்தார்கள். அத்துடன் ம் சிகிச்சை செய்து கொண்டிருந்த ாது ஒரு மூதாட்டி இறந்துவிட்டாள் ாத்தத்தில் எம்மிடம் காயமடைந்தவர் பத்துப் பேரும், இறந்தவர்கள் மூன்று ரும் இருந்தனர்

காயமடைந்த பத்துப் பேரில் ஐவர் ாராளிகள். ஒருவர் என்னிடம் பயிற்சி பற்ற 'சென்ஜோன்ஸ்' முதலுதவியாளன் த முதலுதவியாளனுக்கு தலையில் பாம்மர் தாக்குதலினால் காயமேற்பட்டு ளை வெளியில் வந்துவிட்டது. அவன் யிருக்காகப் போராடிக் கொண்டிருந்தான் க்குத் தெரியும். அவர் தாய்க்கு ஒரே ன். தந்தையும் இல்லை. என்னால் ஆனவரை அவருக்குச் செய்யக்கூடிய சிகிச் சையெல்லாம் செய்தேன். ஆனால் காயப் பட்டு 7ம் நாள் மந்திகை அரசினர் வைத் தியசாலையில் அவர் இறந்துவிட்டார்.

போராளிகளில் ஒருவருக்குத்தான் கொஞ்சம் கடுமை. வயிற்றில் குண்டு பாய்ந்திருந்தது. ஆகவே அவருக்கு விசேட கவனிப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் இருந்ததால், அவரை பிரசவ வாட்டில் இருந்து பிரசவ அறைக்கு மாற்றி, அங் குள்ள ஓர் கட்டிலில் படுக்க வைத்தோம். (பிரசவ அறையினுள் மகப் பேற்றுக்காக மூன்று கட்டில்கள் மட்டும் போடப்பட் டுள்ளன.)

இந்நிலையில் தான் எனக்குப் பெரும் சோதனை ஏற்படத் தொடங்கியது. ஏற் கனவே பிள்ளைப் பெறுவுக்காக அனுமதிக் கப்பட்டிருந்த ஐந்து கர்ப்பிணித் தாய்மார் களும் மக்களுடன் மக்களாக அந்தப் பிர சவ வாட்டினுள் இருந்தார்கள். அவர்கள் யாவருக்கும் பிள்ளை பிறப்பதற்குரிய காலக் கெடுவுக்கு நாள் இன்னமும் இருக் கின்றது. அன்று காலைவரை எதுவித வலியோ, அறிகுறியோ இல்லாமல் இருந்த வர்கள். ஆனால் தொடர்ச்சியான ஆகா யத்தாக்குதலினாலோ அல்லது இராணுவம் முன்னேறிக் கொண்டு வருவதினால் என் னவோ அவர்களில் இருவருக்கு பிரசவ வேதனை தொடங்கி விட்டது. அதில் ஒரு வர், ஏற்கனவே வயிற்றில் காயமடைநது பிரசவ அறையில் எமது தீவிர கவனிப்பில் இருக்கும் போராளியின் சொந்த சகோதரி. இச் சகோதரி தம்பி காயப்பட்டு வந்த நேரத்தில் இருந்து அழுது கொண்டேயிருந் தவர். இந்த உளரீதியான தாக்கத்தினால் பிரசவ வலி சடுதியாக ஏற்பட்டிருக்கலாம் என்பது எனது அபிப்பிராயம், பிறகென்ன. உடனடியாக அவரைப் பிரசவ அறைக்குக் கூட்டிச் சென்று, தம்பியின் கட்டிலுக்குப் பக்கத்துக் கட்டிலில் படுக்க வைத்து விட்டு, இரு கட்டில்களுக்கும் இடையில் ஒரு திரை போட்டு விட்டு பிரசவத்தைச் பார்வையிடத்

www.tamilarangam.net

தொடங்கினேன். இதே நேரத்தில் வைத்திய சாலையைச் சுற்றி மும்முனைத் தாக்குதல்களும் நடந்து கொண்டிருந்தது.

இந்தத் தாய்க்கு இது இரண்டாவது பிரசவம். ஆகையால ஒரு அரை மணித்தியாலப் போராட்டத்தின் பின்பு ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். எல்லாருக்கும் திருப்தி. ஆனால் எமது திருப்தி? ஏன் தாயின் சந்தோசம் கூட ஒரு விநாடியில் மறைந்து விட்டது. அவரின் முகத்தில் கூட ஓர் இனம் தெரியாத பீதி ஏனென்றால் இப்ப பிறந்தவன் ஆண்பிள்ளைப்பிள்ளையல்லவா இவன் சில வேளை மாமனை கொன்றுடுவானோ என்ற பயம் சகலரின் மனதிலும் ஏற்பட்டுவிட்டது. ஆனால் மாமனுக்கோ பெரும் சந்தோசம். பிள்ளை பிறந்தவுடன் "டேய் அக்காவுக்கு பையன் பிறந்திருக்கிறானடா" என்றவுடன் அவன் முகத்தில் ஏற்பட்ட சந்தோசத்தை வார்த்தையில் சொல்ல முடியாது. பிறந்த பிள்ளையோ பாவம், அது என்ன தப்புப் பண்ணியது நாம் எல்லாரும் திட்டுவதற்கு. அதுவோ எம்மைச்சுற்றி நடப்பது தன்னையும் புரியாமல், எம்மையெல்லாம் மலங்க மலங்கப் பார்த்தது. ஆனால் நாம் நினைத்தமாதிரி, பயந்த மாதிரி எதுவுமே நடக்கவில்லை. சகலதும் மூடக் கொள்கைதான் என்பதை நாம் புரிந்து விட்டோம். தாயும், சேயும் மட்டுமல்ல, பக்கத்து கட்டிலில் படுத்திருந்த மாமா கூட நலமாகத் தான் கடைசி வரையிருந்தான். எமது இப் போராட்டம் நடந்தது மதியத்தின் பின் 2 மணியளவில். கிட்டத்தட்ட மாலை 5 மணியிருக்கும் எமது ஆதரவாளர் ஒருவர் எம்மிடம் வந்து இராணுவம் வல்வெட்டித்துறைச் சந்திக்கு கிட்ட வந்திட்டான் நீங்கள் எல்லாரும் வெளிக்கிடுங்க' என்று மக்களிடம் சொன்னார். அவர் சொன்னதுதான் தாமதம் சகல மக்களும் தமது மூட்டை முடிச்சுக்களுடனும் குழந்தை குட்டிகளுடனும் மந்திகையை நோக்கி நடக்கத் தொடங்கி விட்டார்கள். எமது ஊழியர்களிலும் ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் தமது பயணத்தை தொடங்கி விட்டார்கள். யாருக்குதான் பயமில்லை. ஆனால் என் நிலைபோ வைத்தியசாலைப் பொறுப்பு ஒரு பக்கம். அடுத்ததாக வாட்டினுள் காயமடைந்தோர் பத்துப் பேர், இறந்தவர்கள் மூன்று பேர். அத்துடன் ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன் பிரசவித்த தாய்மார்கள் இருவர்.

வந்த ஆதரவாளர் மீண்டும் என்னிடம் வந்து "டொக்ரம்மா நீங்கள் எல்லாரும் வெளிக்கிடுங்க காயக்காரர்களை ஏதோவிதத்தில் ஏற்றுவம்" என்றார் அதே நேரம் இரண்டு ஹெலிகள் எமது வைத்திய சாலையைச் சுற்றி கலிபர் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தன. நாம் உடனடியாக செயல்பட்டு எமது அம்புலன்சுக்கு பச்சை ஓலை கட்டி, உருமறைப்புச் செய்து அதில் காயமடைந்தவர்களை ஏற்றிவிட்டு. பிரசவத் தாய்மார்களை சைக்கிள்களில் ஏற்றி அனுப்பிவிட்டு, இறந்தவர்களை அப்படியே வாட்டினுள் விட்டுவிட்டு, வைத்தியசாலையின் முக்கிய பிரிவுகளைப் பூட்டிவிட்டு, திறப்புகளுடனும் என்னுடன் கூட நின்ற ஒரு சில ஊழியர்களுடனும் நடந்தேன்.

வெளிச்சம்

அடுத்த இதழிலிருந்து

## புதுநிலம்

(சிறப்புப் பகுதி)

இளைய தலைமுறையினரின் படைப்புக்களுக்காக புதுநிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. நான்கு பக்கங்களுக்கு மேற்படாது உங்கள் படைப்புகளை எழுதி அனுப்புங்கள் தரமானவற்றைப் பிரசுரிப்போம்

தொடர்புகளுக்கு:
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
கோண்டாவில். தமிழீழம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிடம் வந்து இரா
றச் சந்திக்குகிட்ட
ல்லாரும் வெளிக்
டம் சொன்னார்.
தாமதம் சில மக்
முடிச்சுக்களுடனும்
ம் மந்திகையை
ங்கி விட்டார்கள்.
ஒரு சிலரைத்தவிர
ாத்தை தொடங்கி
ான் பயமில்லை,
வைத்தியசாலைப்
டுத்ததாக வாட்டி
பத்துப் பேர், இறந்
அத்துடன் ஒரு சில
முன் பிரசவித்த

மீண்டும் என்னி
மா நீங்கள் எல்லா
காயக்காரர்களை
ம் ''என்றார் அதே
ள் எமது வைத்திய
ர் தாக்குதலை நடத்
ாம் உடனடியாக
புலன்சுக்கு பச்சை
ப்புச் செய்து அதில்
ஏற்றிவிட்டு பிரச
சக்கிள்களில் ஏற்றி
ர்களை அப்பிடியே
டு, வைத்தியசாலை
ளப் பூட்டிவிட்டு,
னுடன் கூட நின்ற
னும் நடந்தேன்

ப்பட்டுள்ளது.
அனுப்புங்கள்

ாட்டுக் கழகம்





# உயிர்ப்பொருள்

கி. சிவஞானம்

கொழும்பிலிருந்து வருகையிலும்
இடைமறித்தாய்.
'திற
கொட்டு' என
அதட்டுகிறது உன் குரல்.

தட்டும்
தேடும்
தூக்கி எறியும்
உன் கொலைக் கைத்தடி.

தெருவின் நடுவே
குட்டித் தங்கைச்சியின் அப்பிளும்
அம்மாவின் வெள்ளைச் சேலையும்
என் சந்தியாவின் திருக்குறளும்......
குவியலாய்... சிதையலாய்...

நான் விலை கொடுத்து வாங்கியதில்
என் அனுமதியின்றி நீ எடுத்தபின்
எஞ்சியதை,
'அள்ளு
அடை, அவசரமாய்த் தூக்கு
ஓடு ஓடு...'
என்று விரட்டுவாய்.
வெற்றி வீரனாய் நீ.
வேகும் மனதுடன் நான்.

கூனிக் குறுகிக்
குட்டுப்பட்டு நிமிர்கையில்
அப்பிளும், வெள்ளைச் சேலையும்,
திருக்குறளும்
என்னை எனக்குள் நிறுத்தின.

என்
விதவை அம்மாவும்
குட்டித் தங்கைச்சியும்
சந்தியாவும்
என்னுள் தீமூட்ட
ஏளனமாய்
உன்னைப் பார்த்தபடி
'இனி மேல்' என்னையும்
தடைசெய்யப் பட்ட பொருளாக்கு'
என்றபடி என்
கால்கள் விரையும்
என் தேசத்தை நோக்கி!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை



# தொடருதல்

கருணாகரன்

குளித்து விட்டு வரப் பரமன் கூப்பிட்டான்.

''அண்ணை''

இவன் நிமிர்ந்து பரமனைக் கவனித்தான். பரமன் தயங்கினான். எதையோ கேட்கும் கேள்வி ஒன்றில் முகம் புதைந்திருந்தது.

''என்ன சொல்லு''

கபடமற்ற தயக்கம் பரமனுக்கு. தலையைத் துவட்டியபடி கேட்டவன் நடந்தான் கொட்டிலுக்கு. பரமன் பின் தொடர்ந்தான்.

''சொல்லன்''

திருப்பவும் இவன் கேட்டான். வற்புறுத்தலும் ஒரு இதமான வருடலாக இருந்தது.

''இண்டைக்கு மட்டும் ஒரு கடிதம் எழுதித் தாங்கோ அண்ணை'' பரமனின் குரல் அடங்கி, வேண்டுதலாக வந்தது.

நின்று. திரும்பி, பரமனை ஊடுருவினான்.

''முந்தியும் சொன்னனான். நீயாக எழுதப்பார். எழுதலாம். நீதான் எழுத வேணுமெண்டு யோசி''

பரமனின் தயக்கம் தீவிரமாகிறது. ஏன் கேட்டோம் என்ற பொருள் அவனுள் எழுந்தது. பேச்சற்று நின்றான்.

''என்ன யோசிக்கிறாய்'' இவனின் மனம் இளகிக் கனிந்தது. பார்வையில் கனிவு வழிந்தது.

''வா'' நடந்து கொட்டிலுக்குள் வந்தான். சோப்பைக் கொட்டிலுக்குள் வைத்துவிட்டு, துணிகளை கொடியில் உலரப் போட்டபடி சொன்னான்;

''இயக்கத்தில எல்லாருக்கும் முடிஞ்சளவுக்கு எல்லாத்தையும் செய்யத் தெரிஞ்சிருக்கோணும். சும்மா இருக்கிற நேரத்தில பழக வேண்டியதைப் பழக முயலவேணும். சும்மா இருக்க நேரமிராதுதான். எண்டாலும் முடிஞ்சவரையில...''

கொட்டிலுக்குள் வந்தவன் பரமனைக் கூப்பிட்டு மேசைக்கருகில் இருத்தினான். வரிசையில் துவக்குகள் அடுக்கியிருந்தன. அவரவர் அவரவர் வேலைகளில். பகிடியும் சிரிப்புமாக பம்பல் ஒருபக்கம்.

சதா எதையோ படித்துக் கொண்டிருந்தான். சேரன் பத்திரிகையில் குறிப்பெடுத்து, தன் நாட்குறிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ல்

விட்டு, துணிகளை
ில் உலரப் போட்ட
ான்னான்;

ியக்கத்தில எல்லா
முடிஞ்சளவுக்கு
தையும் செய்யத்
ஞ்சிருக்கோணும்.
இருக்கிற நேரத்தில
வேண்டியதைப் பழக
வணும். சும்மா
நேரமிராதுதான்.
லும் முடிஞ்சவரை

ாட்டிலுக்குள் வந்
பரமனைக் கூப்பிட்டு
கருகில் இருத்தி
வரிசையில் துவக்கு
க்கியிருந்தன. அவர
வரவர் வேலைகளில்.
ம் சிரிப்புமாக பய
ுபக்கம்.

ா எதையோ படித்
காண்டிருந்தான்
பத்திரிகையில் குறிப்
து, தன் நாட்குறிப்



குறித்துக் கொண்டிதான்.

வெளியே காகங்கள் ட்டமாகக் கரைந்து காண்டிருந்தன. ஹேமன் ற்றப்போலால் அடித்து ... காகங்கள், அணில், று அவனுக்கு இலக்கு வக்கும் விளையாட்டு... ஹேமனின் கல் தெறிச்சக் கங்கள் மரத்தின் மேல் சைந்து தாறுமாறாக...

இவன் கவனத்தை பரனிடம் திருப்பி, "ஆருக்க் கடிதம் எழுதோணும். தான் இப்ப எழுதுறது. எழுதினதுக்குப் பிறகு ான் வேணுமெண்டால் ார்த்துத் திருத்துறன். ார்! நீ உந்தி உன்ர பேரைக் ட எழுதமாட்டாய். இப்ப எவ்வளவு வடிவாக ன்ர பேரை எழுதுவா யணை 'முடியாதெண்டு ஒண்டில்லை. முடியுமெண்டு னை, எண்டு அண்ணை நடுகலும் சொல்லுவார்."

"ஓமண்ணை எழுதுவன். எண்டாலும், அதுகளுக்கு என்ர எழுத்து விளங்காதெண்டுதான்..."

"வடிவாக, தான் நினைக்கிறமாதிரி எழுதி, அதுகளுக்கு அனுப்ப வேணுமெண்ட எண்ணம் பரமனுக்கு. ஆசையின் ஏக்கம் கண்களில் தேங்கியிருந்தது"

"பரவாயில்லை எங்களோட பழகினதுகளுக்கு உங்களின்ர அன்பைத் தெரியும். நீயே எழுது நான் திருத்திவிடுகிறன்" என்று பரமனைத் தூண்டினான்.

தயக்கத்துடன் பரமன் எழுதத் தொடங்கினான். வெள்ளைப் பேப்பரில் அவனுக்கு எழுதவராது. சொத்திக்குப் போகுப. கோட்டுப் பேப்பரில் எழுதினான்.

□ □ □

பரமனுக்குப் படிக்க வசதியிருக்கவில்லை. வறுமையும் கிராமமும் படிக்க விடாமல் தடுத்துவிட்டன. கெட்டிக்காரன். மனக்கணக்கில் படபடவெண்டு எதையும் சொல்லுவான். ஒண்டையும் மறக்க மாட்டான். அடிபாடுகள், குறூப்பில இருக்கும் போது நடந்த பகிடிகள், சண்டையின் போது நடந்து கொள்ளும் முறைபற்றி பயிற்சிகளின் போது கூறப்பட்ட அறிவுறுத்தல்கள், என்று தன்ர அனுபவங்களையெல்லாம் சொல்லுவான். ஆனால் வீட்டுக்கு கடிதம் எழுத வேணுமெண்டாலும் ஆரையும் கொண்டு தான் எழுதுவிப்பான்.

இயக்கத்துக்கு வந்ததுக்குப்பிறகு இப்ப எழுத, வாசிக்க ஓரளவுக்கு வரும். எண்டாலும் பதிதாக ஆருக்கும் எழுத வேணுமெண்டா ஆரையும் கொண்டுதான் எழுத வேணுமெண்டு ஆசை. வடிவான எழுத்தில் நேராக, நல்லா எழுதி அனுப்ப வேணும் என்ட எண்ணம்.

□ □ □

"நேரமாகுது. கெதியா எழுது. நான் வெளிக்கிடுறன்" சோச்சரைக் கட்டியபடி இவன் சொன்னான். ஹேமன் 'கெற்றப்போலை' வைத்துவிட்டு ஷோல்சரைக்கட்டி T. 81ஐ எடுத்துக் கொண்டு முற்றத்தில் வந்தான். மழை தூறிக்கொண்டிருந்தது.

இப்பவும் மரங்களில் காகங்களின் ஆலவட்டம். ரகு கலைத்தான். காகங்களின் ஆலவட்டத்துக்கு காரணம் தேடினான்.

சாப்பாட்டுப் பார்சல்களின் கழிவுகளில் ஒண்டிரண்டு தெரிந்தது. "ஆர் இதைப் போட்டது" ரகு கத்தினான். சின்னராசு பேசாமல் போய் கழிவுகளைப் பொறுக்கிக் கிடங்கில் போட்டான். தன்ர தவறை மௌனத்தில், பொறுக்கிப் போட்டதில் உணர்த்தியிருந்தான் போலும்.

அது முன் காவலரண்களுக்குக் கிட்டவாகவுள்ள தங்கு நிலை முகாம். காகங்கள், மற்றும் ஏதாவது அசைவுகள் தெரிந்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த இடத்தில் முகாம் இருக்கிறதென இராணுவம் 'ஷெல்' அடிக்கும்.

இவன் பரமனின் கடிதத்தை வாங்கிப்படித்தான். பரமன் முதல் இருந்த இடத்தில் 'அம்மை' கண்டு படுத்திருந்தான். முகாமில் பராமரிப்பு என்றாலும் உதவிக்குச் சாப்பாடு. அது இது எண்டு பக்கத்தில இருந்த வீட்டுக்காரர்கள் பரமனைக் கவனித்தார்.

இப்ப இடம் விட்டு, முகாம்மாறி, இங்க வந்த பிறகு அவையளுக்கு நன்றி சொல்லி கடிதம் போட வேண்டுமென்று நன்றி ஊற்றில் எழுதியிருந்தான்.

எப்பவும் சனங்களின்ர ஆதரிப்பு மனசுக்குள் நன்றியாகச் சுரந்து கொண்டேயிருக்கும். எவ்வளவு பிரச்சினைக்குள்ளையும், ஏன் இந்தியன்ர பிரச்சினைக்குள்ளை எல்லாம் என்ன மாதிரிப் பொத்திப் பொத்திப் பாதுகாத்ததுகள்.

'சனங்களின்ர அன்பும், ஆதரிப்பும் இல்லை என்றால் என்ன செய்ய முடியும்?' என்ற எண்ணம் பரமனுக்கு இவனுக்கும்; எல்லாருக்கும்.

எழுதியிருந்த கடிதத்தில் சிலவற்றை இவன் திருத்தினான். பரமன் அழுந்தி, சிலேற்றில் எழுதுவதைப் போல எழுதியிருந்தான். ஆழமான பதிவு ஆழமான அன்பையும் நன்றியையும் போல.

"பார் உன்னைக் கவனிச்சதுகளுக்கு நீ எழுதினது எவ்வளவு நல்லாக இருக்கு. உனக்குத்தான் தெரியும் அதுகளின்ர அன்பும் ஆதரிப்பும். உன்ர உணர்வுகளும். நான் உனக்காக இப்படி எழுதேலாது."

பரமன் மகிழ்வில் நீந்தினன். சிரிப்புடன் தலையாட்டினான். உள்ளப் பூரிப்பில் அவன் திளைத்தான். கண்ணில் ஒரு கோடி சூரியப் பிரகாசம் தெரிந்தது. நிலவில் நடப்பது போன்ற சுகத்தை அவன் கண்கள் காட்டின. மகிழ்வின் பளபளப்பு. நம்பிக்கையின் ஒளி

"முடியாது எண்டு ஒண்டில்ல. முடியுமெண்டு நினை; முடியும் எண்டு நம்பிக்கை வைத்தால் முடியாதெண்டில்லை." இவன் திரும்பவும் சொல்லிவிட்டு G. 3 ஐத் தூக்கிச் சரி பார்த்தான்.

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. மாறிவிட வேணும். நடந்தார்கள்.

இவன், அரவிந்தன்,

ஜெகன், வேணு, புகழ்.

நலம், சதா

... இன்னும் ஐந்தாறு பேர் எண்ணிக் கணக்கெடுத்தான். எண்ணிக்கை சரி.

□ □ □

வீடுகள் அநாதரவாகிக் கிடந்தன. ஊமைத்தனமாக வீதி. குடியிருந்தவர்கள் துரத்தப்பட்டு விட்டார்கள். தூசிமண்டிய அந்த வீதிகளில, கவிந்த மௌனத்தைக் கலைத்தபடி பகிடியும் சிரிப்புமாக நடந்தார்கள்.

இராணுவம் 'ஷெல்'லும் குண்டுகளும் போட்ட சின்னங்கள் சுவர்களிலும், கூரைகளிலும், மரங்களிலும் காலவடுக்களாகத் தெரிந்தன.

வேலிகள் கறையான் படர்ந்து ... கொப்புக்கள் முறிந்த மாமரங்கள் ... சூழவும் யுத்தத்தின் முகம்.

துரத்தப்பட்ட மக்கள் ஓலமிடுவது போல அந்த அமைதியின் அந்தகாரம் இவனுக்குப்பட்டது. அமைதியும் ஒரு இசைதான். அசையாத காற்றும் தன் பாட்டில். — இவர்களைத் தவிர சூழல் இறுகிப் போயிருப்பதை உணர்ந்தான்.

கட்டாக்காலிமாடுகள் ஒன்றிரண்டு தூரத்தில் தெரிந்தது திரும்பிப்பார்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புற்கள் எழுந்து, படர்ந்து, வடலிகள் முளை விட்டுச் சடைத்து......

மழை இப்பொழும் பல மாகத் தூறிக் கொண்டிருந்தது. நனைந்தபடி நடை.

மாறிவிட்டாயிற்று இனிக் கவனம் சூழலில்; எதிரில், எதிரியில்.

காப்பரணில் இவன் கவனித்திருந்தான். கூட வந்தவர்கள் எல்லாம் இவனுடன்; இணைந்திருந்த நிலைகளில்; கவனிப்பில்.

□ □ □

மழைத் தூறலில், முன்னிருட்டு, வெடித்தன துப்பாக்கிகள் இங்கிருந்தும், எதிரிலிருந்தும். புகையும், பொறியும் உமிழும் துப்பாக்கிகளால் குறிபார்த்து அடித்தார்கள் - தோள்கள் குலுங்க.

'வோக்கி' இலக்கங்கள் மாறி, மாறி தொடர்பில் கனைத்தது. மற்றத் தோழர்களுக்கு அழைப்பு. இராணுவம் இடதுபக்கமாக முழங்கை முடக்கில் முன்னேற முயன்றது.

'நகர, ஒரு அடியும் முன்னிக்க விடோம்' என்ற ஆவேசத்தில் சண்டை ...ணைக்குக் காந்தன் றூப்' வந்தது.

''அருளைப் போடு'' போட்டான் ஒருவன்.

''முன்னுக்கு வா ஓடு. பனைக்குப் பின்னாலை பதுங்குகிறவனுக்கு அடி'...

சத்தங்கள் சண்டையுடன்...

சபேசனுக்குத் தலையில வெடி. தூக்கினான் கணேஸ். இராணுவம் பின்வாங்க, இவர்கள் முன்னேற, தடக்கியது இவனின் காலில்... இராணுவம்தான். அவனின் துப்பாக்கியைத் தடவி எடுத்துக் கொண்டு முன்னேறி ..

இராணுவம் பின்வாங்கி தங்கள் நிலைகளுள்..... காயப்பட்டவர்களுடன் இறந்தவர்களை விட்டு விட்டு.

இனிப் 'பராலைற்' அடிச்சுத் தேடுவான். அதுக்கிடையில பொறுக்க வேண்டியதை...

இராணுவத்தினரின் சடலங்களைத் தவிர்த்து ஆயுதங்களையும், பொருட்களையும் எடுத்து மீண்டும்வர...

''அரவிந்தனுக்குக் காலில வெடி அனுப்பியாச்சு. பரமனுக்கு நெத்தியில...... குணத்துக்குத் தலையில......'' கணேஸ் சொன்னான்.

''சபேசனுக்கும் அரவிந்தனுக்கும் பிரச்சினையில்லை ...''

'அரைமணித்தியாலத்தில ரண்டு பேரைக் குடுத்திட்டம்' இப்படி எத்தனையோ தடவைகள் அனுபவப்பட்டாலும் ஒவ்வொரு தடவையும் துயரம் பீறிடுகிறது. எவ்வளவு குருதிகளை இப்படித் தூக்கும் போது அழைந்த கைகள் இப்பொழுதும் நடுங்குகின்றன.

ஒன்றாக இருந்து, ஒன்றாகச் சாப்பிட்டு, ஒன்றாகப் போராடி, ஒரே உணர்வாக இருந்ததாலோ என்று அந்தக் கணம் நினைத்தான்.

பரமனை இவன் தூக்க, ஆளுக்காள் மீட்புடன்...

நெஞ்சு கொதித்தது இவனுக்கு. இப்பவே இராணுவத்தை அடித்துக் கொல்ல வேணும் என்று கொந்தளித்தது.

'எங்கட இடத்தில வந்து நிண்டு எவ்வளவு அடாத்துப் பண்ணுற நாங்கள்? விடமாட்டம்.'

நின்று திரும்பிப்பார்த்தான். தூரத்தில் இருளில் இருட்குவியலாகத் தெரிந்தன .. எதிரியின் நிலைகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புயலின் குமுறல் நெஞ்சினுள். ஏதோ தீர்மானத்துடன் தலையாட்டி விட்டு நடந்தான்.

எல்லாவற்றையும் கொண்டு வந்தாயிற்று. பரமனிலிருந்து வடிந்த குருதியின் சூடு இன்னும் கொதித்தபடி.... ஒழுங்கையில் பூவரசுக்குக் கீழ் நின்ற ரைக்ரரில் கிடத்தும் போது ... அவசரமாகப் பரமனின் பொக்கற்றுள் தடவினான். நன்றியின் பொருள்.

இருட்டுக்குள் எதுவும் தெரியவில்லை. பக்குவமாகத் தன்ர பொக்கற்றுக்குள் வைத்தான். ஒழுங்கையால் திரும்பி ஊருக்குள் வர 'டோச்'சைப் பிடித்துப் பரமனின் கடிதத்தை எடுத்துப் பார்த்தான். மடிப்புகளில் இரத்தம் ஊறி..... நன்றியைக் குருதியாக நனைத்திருந்தான்......

'ரைக்ரர்' போய்க் கொண்டிருந்தது.

□ □ □

அடுத்த நாள், பல வேலைகளினூடும் பரமனின் கடிதத்தையும், பரமன் குறிப்பிட்டிருந்த முகவரிக்கு இவன் அனுப்பியிருந்தான். பரமன் எழுதியவற்றுடன், அதன் கீழ்; ''உங்களுக்கான நன்றியைப் பரமன் தனது குருதியாலும் உயிராலும் எழுதியுள்ளான். என்னை உங்களுக்குத் தெரியாவிட்டாலும் அவனது தோழன். அவனது உணர்வுடன் செயற்படுவர்களில் ஒருவன். எழுதியகடிதத்தை பரமன் அனுப்ப முதலே ஒரு சண்டையின் போது அவனை இழந்து போனோம். அவனுடைய நினைவுகளுடன் நாங்கள் முன்னேறுவோம். பரமனுடன் முடியாமல், உங்களின் அன்பும், ஆதரிப்பும் எங்களுடனும் தொடரவேண்டும், துணையிருக்க வேண்டும்......'' என்று எழுதி தனது பெயரையும் குறிப்பிட்டு.

□□

''வெளிச்சம்''
கலை இலக்கிய சமூக இதழ்

இதழ் அமைப்பு:-
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

முகப்பு ஓவியம்:-
''ராஜன்''

முகப்பு ஓவியத்திற்கான மரப்படிமம்:-
''ஆனந்தன்''

அச்சு:-
ம. மரியதாஸ்

உருவாக்கம்:-
''ஆசிரியர் குழு''

வெளியீடு:
விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கைகட்டி எங்கள் தமிழீழம் நிற்காது
காலில் விழுந்தினி யாரையும் கெஞ்சாது

தீரமுடன் நின்று களத்தினிலாடி — மா
வீரராகவே தாயக மண்ணில் மடிந்தரும்
ஈரஉளங் கொண்ட எங்களின் வீரர்கள்
உறங்கிடும் கல்லறைகள் உள்ள நாடாதலால்

கைகட்டி எங்கள் தமிழீழம் நிற்காது
காலில் விழுந்தினி யாரையும் கெஞ்சாது!

விடுதலை எங்களின் உயிர்மூச்சென்று
விழிகளை ஒருகணம்கூட இமைத்திடா
விடுதலைப் புலிகள் எங்களின எல்லையில்
விருப்புடன் நின்றுமே தானை நடத்தலால்

கைகட்டி எங்கள் தமிழீழம் நிற்காது
காலில் விழுந்தினி யாரையும் கெஞ்சாது!

உழுது பயிர்செய்து வாழ்ந்திடும் எங்களின்
உயரிய தாயக வேந்தராம் உழவர்கள்
விழுதுகளாகவே வாழும் இப்பூமி
தொழுதுயாரையும் கெஞ்சி நின்றிடுமோ

கைகட்டி எங்கள் தமிழீழம் நிற்காது
காலில் விழுந்தினி யாரையும் கெஞ்சாது!

ஈழத்தின் எல்லையாம் ஆழக்கடல்களில்
நீளக்கிடக்கின்ற நித்தில வளங்கள்;
வாழ வழிதரும் ஆயிரம் வளங்கள்
உள எங்கள் தாயக பூமி இது


கைகட்டி எங்கள் தமிழீழம் நிற்காது
காலில் விழுந்தினி யாரையும் கெஞ்சாது!



## கைகட்டி எங்கள் தமிழீழம் நிற்காது

அரியாலையூர் கேந்திரன்

www.tamilarangam.net



# நல்லூர் இராசதானி

யமுனாரி

தமிழ் மன்னர்களின் ஆட்சியில் தலைநகராக விளங்கிய நகர்களுள் நல்லூர் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. நல்லூர் நகரம் அக்காலத்தில் கோப்பாய், வண்ணார்பண்ணை, தற்போதைய யாழ்ப்பாண நகரப்பகுதி ஆகிய இடங்களை உள்ளடக்கியதாக இருந்தது இந்நகரம் பிறரால் ஏற்படக்கூடிய ஆபத்துகளில் இருந்து பாதுகாக்கக் கூடிய வகையிலும், ஏனைய பிரதேசங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வகையிலும் கேந்திர முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது.

நல்லூர் இராசதானி அழிக்கப்பட்டு மூன்றரை நூற்றாண்டுகள் மட்டுமே கழிந்துள்ளன. ஆயினும் அதன் எச்ச சொச்சங்கள் மிகவும் அரிதானவையாகவும், அதிகம் அறியப்படாதவையாகவும் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஆனால் வயல் வளங்களும், செழிப்பும் மிக்கதாக விளங்கிய நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த இராசதானி சமகாலங்களில் ஏனைய இராசதானிகள் அமைந்திருந்தது போன்று தரமானதாக அமைந்திருந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இதனை யாழ்ப்பாண வரலாறு பற்றிக் கூறும் நூல்களான கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களும் போர்த்துக்கேய இலக்கிய நூல்களும் குறிப்பிடுகின்றன.

கைலாயமாலை, நல்லூரில் அமைக்கப்பட்ட அரண்மனை மதில்களால் சூழப்பட்டதாகவும், தூண்கள் நிறைந்ததாகவும், பெரும் முற்றம், ஜன்னல்கள் என்பவற்றைக் கொண்டதாகவும், மொட்டைமாடியுடன் கூடிய மாடி வீட்டினைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது எனக் கூறியுள்ளது. யாழ்ப்பாண வைபவ மாலையின் குறிப்புகள், நகரின் நான்கு எல்லையிலும் ஆலயங்கள் அமைந்திருந்தமை பற்றியும், நகரின் உள்ளே கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டமை பற்றியும் குறிப்பிடுகின்றது.

போர்த்துக்கேய நூல்கள், சந்தையொன்றிற்கு மிகவும் அண்மையில் யாழ்ப்பாண அரசர்களின் மாளிகை அமைந்திருந்ததைக் குறிப்பிடுகின்றன. அதுமட்டுமன்றி, கோப்பாயிலும் ஓர் அரண்மிக்க அரசவதிவிடம் அமைந்திருந்ததைக் குறிப்பிடுகின்றன. இது கோப்பாயின் பழைய கோட்டை என்ற வளவிற்குள் அமைந்திருந்தது என்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சதானி

ரலாறு பற்றிக்
கலாய மாலை,
ல போன்ற நூல்
க்கிய நூல்களும்

ரில் அமைக்கப்
ளால் சூழப்பட்ட
நிறைந்ததாகவும்,
கள் என்பவற்
மொட்டைமாடி
னைக் கொண்ட
எனக் கூறியுள்
பவ மாளையின்
த எல்லையிலும்
த்தைப் பற்றியும்,
கோயில் அமைக்
றிப்பிடுகின்றது.

ல்கள், சந்நை
மையில் யாழ்ப்
க அமைந்திருந்
அதுமட்டுமன்றி,
மிக்க அரசவதி
குறிப்பிடுகின்
ழைய கோட்டை
இருந்தது என்ப

தைச் சுவாமி ஞானப்பிரகாசர் எடுத்துக் காட்டியுள்ளார்.

நல்லூர் இராசதானி 1620 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து முற்றாக அழிக்கப்பட்டது. அரண்மனைக் கட்டிடங்களும், அதற்குள் அமைந்திருந்த ஆலயங்களும் அழிக்கப்பட்டுப் போர்த்துக்கேயரின் நிர்வாக, மதக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன என்பதைப் போர்த்துக்கேய நூல்கள் கூறுகின்றன.

1650களில் நல்லூரில் சிறுகுளங்களும் வாசனை மிக்க மலர்களுமே நிறைந்திருந்தன எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு முற்றாக அழிககப்பட்ட நல்லூர் இராசதானியின் எச்ச சொச்சமான ஒரே நிலையமாக இன்று நாம் அறியக் கூடியதாக இருப்பது யமுனாரி எனப்படும் நீர்த்தேக்கம் ஆகும்.

இந்நீர்த்தேக்கம் பற்றிப் பலரும் பலவாறகக் கூறுகின்றனர். இங்கு அரச மகளிர் நீராடினர் எனப் பொதுவாகப் பேசப்படுகின்றது. ஆனால் அதன் அமைப்பு முறை அது நல்லூர் அரண்மனையின் ஒரு அங்கமாக இருக்கலாம் என எண்ண வைக்கின்றது.

பொதுவாக நீச்சல் தடாகங்கள் வட்ட வடிவமாகவோ சதுர வடிவமாகவோ நீள் வட்ட, நீள்சதுர வடிவாகவோ அமைக்கப்படுவது வழமையானதாகும். இது 'ப'கர வடிவானதாக உள்ளதோடு, அதன் ஒரு புறம் தூர்ந்தமையைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. ஆதலால் இது அரச வதிவிடத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் அமைக்கப்பட்ட ஒரு அகழியின் பகுதியாக இருக்கக் கூடுமா? எனச் சந்தேகிக்க வைக்கிறது.

அத்துடன் இந்நீர்த்தேக்கத்தின் ஒரு புறச் சுவர் நேரிய தன்மை கொண்டதாகவும், கட்டிட அடித்தளத்தைக் கொண்ட மறு பகுதிச் சுவர் மென்சாய்வான தன்மை கொண்டதாகவும் அமைந்திருப்பது மேற்படி சந்தேகத்தை மேலும் கூட்டுவதாக உள்ளது.

இப்பகுதியில் டச்சுக்காரர் காலத்தில் ஒரு மதக்கல்லூரி அமைக்கப்பட்டிருந்தமையால், பழைய இராசதானியின் சுவடுகளின் மேல் புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன எனலாம். இது நல்லூர் இராசதானியின் உண்மையான சுவடுகளை அவதானிப்பதில் சில சிக்கல்களை ஏற்படுத்துகின்றன.

ஆயினும் நல்லூர் இராசதானி, மிக அண்மைக்காலம் வரை எமது ஆட்சிப்பீடமாக நிலவிய பகுதி. பாதுகாக்கப்பட வேண்டும். அவை பற்றிய மேலதிக தடயங்கள் ஆராயப்பட வேண்டும். □□

"இலக்கியம் என்பது எழுத்தாளன் தான் வாழும் காலத்தின் பிரச்சினைகளை, தான்காணும் மனிதர்களின் பிரச்சினையை வெளிப்படுத்த வேண்டும் என்பது என் அபிப்பிராயம். அப்படி எழுதப்படாமல் வெறும் பெயருக்கும், புகழுக்கும் எழுதுவது இலக்கியத்திறமையை விபசாரம் செய்வது போலாகும். நடைமுறை வலிமையற்ற இலக்கியத்துக்கு எந்த மதிப்பும் இருக்காது என்பது என் அபிப்பிராயம்....."
['ஒரு கோடைவிடுமுறை' நாவலில் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்]
□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு போராளியின் பதிவேட்டில்

மன்னார் மாவட்டத்தில் வீரமரணமடைந்த முதல்புலி. இராணுவ சுற்றிவளைப்பின்போது இறுதிவரை போராடி எதிரியின் கையில தான் உயிரோடு பிடிபடக்கூடாது என நினைத்து தன் கைத்துப்பாக்கியாலே தன்னைத் தானே சுட்டு எமது இயக்க மரபுக்கு இணங்க வீரமரணத்தை அடைந்தவன் நிதி.

அன்று நாங்கள் நிதியைப்பற்றி அறிந்திருந்தோமே தவிர விடுதலையைப்பற்றிப் புரியவில்லை நிதியின் இறுதி நிகழ்வு பெரிதாக ஊர்வலமாக நடத்தப்படவில்லை. அன்றைய காலகட்டம் மிகப்பயங்கரமாக இருந்ததால், ஒவ்வொருவர் வாயிலும் மெதுவாகப் பேசப்படுகிறது.

புலிப்படை நிதி இறந்துவிட்டான் என்றே கூறப்படுகிறது அன்றைய நேரத்தில் மரண நிகழ்வு என்பது எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத மனநிலையில்தான் இருநதோம்.

இளம்வயது. வாழ வேண்டிய காலம். இப்படி மரணித்துப் போவதா என்று மக்கள் கலக்கத்தோடு கண்கலங்கி திரிகின்றார்கள். ஞாயிறுகிழமைகளில் நாம் தேவாலயத்துக்கு போகும் போது ஒரு பையோடு சந்தியில் நிற்கும் நிதி.

அப்போது புலிப்படையைப் பார்க்க ஆவல் எங்களுக்கு. நாம் நேரத்திற்கு கோயிலுக்கு போவதாக கூறிவிட்டு சந்தியில் நிற்கும் புலிப்படையினரை தள்ளி நின்றே பார்ப்போம். சிலர் அவர்களோடு நெருங்கி நின்று கதைப்பார்கள். நாமும் மெதுவாக கிட்ட சென்று நிற்போம்.

சில நாட்கள் போனபின் சந்தியில் சிரித்துநின்ற நிதியின் வீரமரணம் பற்றி போஸ்டல் ஒட்டப்பட்டிருந்ததை பார்க்கும் போது எங்கள் மனம் எதையெல்லாம் யோசித்துக் கலங்கிக் கொண்டே இருந்தது.

ஏன் நிதி இறந்தான்? பிரபாகரனால் ஏன் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மரணம் என்பது என்ன. ஏன் நாம் வாழ்கின்றோம். எப்படியான

www.tamilarangam.net

நிலையில் தமிழ் இனம் இருக்கிறது. தமிழனுக்கு என்ன நடக்கிறது. எமக்கு யார் விடுதலை பெற்றுத்தந்தவர்கள் விடுதலையில் நாம் வாழ்கின்றோமா? சிறிலங்கா அரசின் கொடுமைபற்றி புரியாத நிலையில் கிடந்த மக்களுக்கு நிதியின் வீரமரணத்தின் பின்தான் தமிழனின் நிலை எப்படியுள்ளது என்று தெரிய வந்தது. எமக்கும் அன்று தெரிய வந்தது.

ஒரு புலி வீரமரணமடையும். மேலும் பல புலிகள் பாசறை நோக்கி வருவார்கள் என மேஜர் அசோக் அண்ணன் அன்று எங்களுக்கு அடிக்கடி கூறுவார். அது உண்மை. நிதி அண்ணனின் வீரமரணத்தின் பின் என் மண் எவ்வளவு துரித வளர்ச்சி பெற்று வளர்ந்து வருகிறது. போராட்டத்தில் இன்று அத்தனைக்கும் காரணம் அண்ணன் காட்டிய வழியில் நின்று போராடி வீரமரணத்தைத் தழுவிய மாவீரர்கள். களத்தில் நின்று போராடும் போராளிகளே!

மன்னார் மண் முதல் முதல் கண்ட களப்புலியில் நிற்கும் புலிவீரர்கள். அன்சார், நிதி ஆகிய மாவீரர்களின் தியாகம் இன்று எம்மை பலப்படுத்தி வளர செய்துள்ளது. அன்சார் (நிக்கலஸ் மைக்கல் குருஸ்) எனும் போராளி தெல்லிப்பளையில் நடந்த முற்றுகையின் போது போராடி வீரச் சாவடைந்தான். நிதி, அன்சார் இம்மாவீரர்கள் எம் மண்ணுக்கு ஒரு ஒளி விளக்காக நின்று மெழுகுவார்த்தியாக உருகியவர்கள். எமது இயக்கத்தில் முதல் முதல் வீரமரணமடைந்த சங்கர் அண்ணன். அந்த ஞாபகத்தில் எம் மன்னார் மண் இழந்த மாவீரர்கள் அன்சார், நிதி என்று கூறிக் கொண்டே போர்க்களம் நோக்கி எழுந்து வருகின்றோம். மாவீரர்கள் தமக்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்று போராடியவர்கள் அல்ல. தம்மண், இனம் விடுதலைபெற வேண்டுமென எண்ணி சாவுக்கு மத்தியில் நின்று போராடி எம்மையும், எம் மண்ணையும் பாதுகாத்து தங்கள் உடல்களை எமக்காக புதைத்தவர்கள். அவர்கள் காட்டிய வழியில் நாமும் விடுதலை பெறும் வரை தொடர வேண்டும். அவர்களின் இலட்சியமும் கனவும் நிறைவேறி எம்மண் விடுதலைபெற நாமும் எமக்காக களத்தில் விழுந்த மாவீரர்களின் ஆயுதத்தை எடுத்து களத்திற்குப் புறப்படுவோம். வா நண்பனே.

இன்று 7 வது ஆண்டில் புதைகுழியில் இருக்கும் மாவீரன் நிதியின் வரலாற்றை படிப்போம். நாளாந்தம் போராடிக் கொண்டு இருக்கும் போராளிகளைப்பற்றிச் சிந்திப்போம் எங்களுக்காக எம்மண்ணைப் பாதுகாக்கும் புனிதப்போரில் நாளாந்தம் வீரமரணமடையும் மாவீரனின் பாதையில் சேர்வோம் என்று உறுதி எடுப்போம். விடுதலை பெற ஒவ்வொருவரும் போராட வேண்டும். புறப்பட்டுச் செல்வோம். போர்க்களம் வா தமிழா.

எங்கள் நிதி எமக்காக மடிந்தான். எங்கள் நிதி தன்னைவிட மண்ணை அதிகம் நேசித்தவன். எங்கள் நிதி தன்குடும்பத்தைவிட தமிழ் மக்களை நேசித்தவன். நிதியின் பாதையில் நானும் செல்வேன் என உறுதி எடுப்பேன். ஐயமில்லை எனக்கு.

பரஞ்சோதி - மன்னார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்